Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 24 (27.02.2003) வியாழக்கிழமை இதழ் :148

# கிளாலியிலிருந்து 3 படகுகளில் புலோப்பளை வந்த கடற்படை

## புலிகளின் காவலரண் முன் தரித்துநின்று திரும்பினர்

கிளாலியிலிருந்து நேற்று மதியம் 3 டிங்கிப் படகுகளில் வந்த கடற்படையினர் புலோப்பளையில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னணிக் காவல் நிலைகளுக்கு நேராகக் கடலில் தரித்து நின்றுவிட்டு மாலையில் மீண்டும் கிளாலி திரும்பியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது, நேற்று மதியம் 2 மணியளவில் மூன்று ஆயுதம் தரித்த டிங்கிப் படகுகளில் கிளாலியிலிருந்து புறப்பட்ட கடற்படையினர், கடல் வழியாக - கிழக்குப் பக்கமாக நகர்ந்துள்ளனர். இவர்கள் புலோப்பளையில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னணிக் காவலரண்களுக்கு நேராக வந்து கடலில் தரித்து நின்றனர்.

இது குறித்து வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் அரசியற்துறைக்கு உடனடியாக அறிவித்தார். அரசியற்துறை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் தொடர்புகொண்டது. இதைத் தொடர்ந்து மாலை 3.30 மணியளவில் டிங்கிப் படகுகளில் வந்த கடற்படையினர் மீண்டும் கிளாலிக்குத் தமது படகுகளில் திரும்பிச் சென்றனர்.

நேற்றுமுன்தினமும் மதியம் ஒரு மணியளவில் இவ்வாறு டிங்கிப் படகுகளில் கடற்படையினர் இப்பகுதிக்கு வந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் இவ்வாறு வந்து செல்வதற்கான காரணம் குறித்து இதுவரை எதுவும் தெரியவரவில்லை.

### விண்ணாணம் விநாசியர்



மலேஷியாவில் ஒண்டு, Madam திரும்பி வந்ததும் மற்றொண்டு தானே...!

### புலிகளின் உயர்மட்டத்தை சந்திக்கத் திட்டம்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் நேற்று மன்னாருக்கு விஜயம் செய்தார். இவருடன் தற்போதைய தலைவர் ஜெனரல் புறூவ் ஹெவ்டேயும் விஜயம் செய்துள்ளார். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடவடிக்கைகள் தொடர்பாக அங்குள்ள பிரதிநிதிகளுடன் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அரசாங்க அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள் பலரையும் அவர்கள் சந்தித்துள்ளனர். கண்காணிப்புக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஞாயிறன்று ஏ -9 வீதி திறப்பு

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை ஏ-9 வீதி போக்குவரத்துக்கு திறந்துவிடப்படும் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல், மாலை 6.30 மணிவரை பாதை திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

# யுத்தம் மூலம் தீர்வு கிடையாது; புலிகளுடன் பேசுவதே ஒரே வழி!

## மலேஷியாவில் வைத்து ஜனாதிபதி அறிவிப்பு



(கோலாலம்பூர்)

**விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைத் தவிர அரசாங்கத்துக்கு வேறுவழியில்லை. நாடு இனி யுத்தத்துக்குச் செல்லமுடியாது. அதனால் - சமாதானப் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே ஒரேவழியாகும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, மலேஷியாவில் புத்ரா மையத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சமாதான முயற்சிகள் ஆபத்தான தென்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனாலும், அந்தப் பாதையில் செல்லத் தீர்மானித்துள்ளோம். இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வாகாது என்ற நம்பிக்கையில்தான் நாம் பேச்சுக்களில் இறங்கியுள்ளோம்.

புலிகள் ஆட்கடத்தல், சிறார்களைப் படையில் சேர்த்தல், புதிய பயிற்சி முகாம்களை உருவாக்குதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டாலும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக் கழக ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)



யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் நேற்று அடையாள வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இதனால், பல்கலைக் கழகத்தின் விரிவுரைகள் எதுவும் நடைபெறவில்லை.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் தாம் முன்வைத்த கோரிக்கைகள் சில, நிர்வாகத்தினால் நிறைவேற்றப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்று அடையாள வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நீர், மின் விநியோகிப்பாளர்கள், பரீட்சை நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் தவிர ஏனையோர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# முன்னாள் மேயருடன் சென்ற அவரின் பிரத்தியேகக் கதிரை

யாழ். மாநகர சபை அலுவலகத்தில் இருந்த யாழ். மேயரின் கதிரை மர்மமாக மறைந்துவிட்டது. யாழ். மேயர் கந்தையன் தனது பதவியை ராஜினாமாச் செய்த பின்னர், அவர் அதுவரை பயன்படுத்திய பிரத்தியேகக் கதிரை மேற்படி அலுவலகத்தில் அநாதரவாகக் காட்சியளித்தது. ஒரு சில தினங்கள் மட்டுமே அந்தக் கதிரைக்கு தனிமை நீடித்தது. பின்னர் அக்கதிரை மர்மமாக மறைந்துவிட்டது.

அந்தக் கதிரை தற்போது முன்னாள் மேயர் கந்தையனின் வீட்டை அலங்கரித்துக் கொண்டிருப்பதாக அறியவருகின்றது.

# திருமலை சிறான் கூட்டம் கிளிநொச்சிக்கு மாற்றம்!

(திருகோணமலை)

திருகோணமலையில் நடைபெறவிருந்த சிறான் கூட்டம், இடமாற்றப்பட்டு கிளிநொச்சியிலேயே நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு நாள் கூட்டத்திற்காக திருமலை வரும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளா தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகள்தரப்புக் குழுவிற்கு, ஆயுதம் தாங்கிய மெய்க்காவலர்கள் பாதுகாப்பு வழங்குவதை ஏற்கமுடியாது. ஆயுதங்களுடன் அரசகட்டுப்பாட்டுப் பகுதியான திருமலை நகருக்கு விடுதலைப் புலிகள் வருவது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணானது என அரச தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதாக ஏ.எவ்.பி. செய்தி ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதனால் சிறான் கூட்டம் இன்று கிளிநொச்சியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இன்று நடைபெறும் அவசர மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைக்கான உபகுழு (சிறான்) கூட்டத்தில் அரச தரப்பில் - சமாதான செயலணிப் பொதுச்செயலாளர் பேணாட் குணதிலக தலைமையிலான குழுவினர் கலந்துகொள்கின்றனர். நோர்வேத் தூதுவர் வெஸ்பேர்க் கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.

### துணைவேந்தரின் பதவிக்காலம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளையின் பதவிக்காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

புதிய துணைவேந்தர் நியமிக்கப்படும்வரை தற்போதைய துணைவேந்தரே தொடர்ந்து கடமையாற்றுவார். இது தொடர்பான சேவை நீடிப்புக் கடிதம் நேற்று யாழ்.பல்கலைக் கழகத்துக்கு கிடைத்தது.

இன்றுடன் இவரது பதவிக்காலம் நிறைவடைய இருந்தது குறிப்பிடத்தக்கது.

சின்ன மீனைப் போட்டு
பெரிய மீனைப் பிடிப்பது எப்படி...?
யாழ்.நகரில் நடந்த திடுக்கிடும் மோசடி!
விரைவில் நமது ஈழநாட்டில்!!

# விடுதலைப் புலிகளையும் உள்ளடக்கி அரசியலமைப்பு சீர்திருத்த ஆணைக்குழு

## அமைச்சர் பீரிஸ் கொழும்பில் தகவல்

(கொழும்பில்)

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக புலிகள் மற்றும் ஏனைய கட்சிகளை உள்ளடங்கிய ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருப்பதாக அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டேலில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பு வரையறுக்கப்பட்டதாகக் காணப்படாது. இதில் மக்களின் கருத்துக்களுக்கும் இடமளிக்கப்படும். இதில் அதிகாரப்பரவலாக்கம் சமூக அடித்தளம் வரைக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று தெரிவித்த அமைச்சர் பீரிஸ்,

அரசியலமைப்புத் திட்டத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை, நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்றும் மேலும் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமானால், அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஐ.நா. துரிதமாக உதவ விருப்பதாக வாக்குறுதி அளிததுள்ளதாகவும்,

ஏற்கனவே வட - கிழக்கில் சிறார் நலன்பேணல் மற்றும் மீள் குடியமர்வுக்கு ஐ.நா. உதவி வருவதாகவும் அமைச்சர் பீரிஸ் அப்போது தெரிவித்தார்.

### காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட கலந்துரையாடல், நாளைமறுதினம் வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 10 மணிக்கு நடைபெறும். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் பங்குபற்றவுள்ளார்.

# தொழில் நுட்ப ஊழியர்களுக்கு திறன் விருத்தி பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் இடைநிலைத் தொழில் நுட்ப ஊழியர்களுக்கு விசேடதிறன் விருத்திப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சித் திட்டத்தில் அரச மற்றும் தனியார் துறைகளில் கடமையாற்றும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

வட-கிழக்கு புனர்வாழ்வு அமைச்சும், ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்ட நிறுவனமும் இணைந்து மேற்படி பயிற்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளன.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும், யாழ்.செயலகம் மேற்கொண்டு வருகிறது. யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து இடைநிலைத் தொழில்நுட்பவியலாளர்களினதும் வேலைத்திறனை அதிகரிக்கும் முகமாகவே மேற்படி பயிற்சி வழங்கப்படவுள்ளது. (க)

### உயர் பெறுமதி முத்திரைகள்

யாழ். பிரதம தபாலகத்திற்கு உயர் பெறுமதி வாய்ந்த முத்திரைகள் நேற்றுக் கிடைத்துள்ளன. இன்றுமுதல் பொதுமக்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ். பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார்.

### கசிப்பு உற்பத்தி செய்தோருக்கு தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த எட்டு நபர்களுக்கு, யாழ். மாவட்ட நீதிமன்று தண்டப்பணம் அறிவிட்டுள்ளது.

இவர்கள் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த வேளை, பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். நேற்று நடைபெற்ற விசாரணையின் பின் இவர்களிடமிருந்து தண்டப்பணமும் தர்மப் பணமும் அறவிடப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

# பிள்ளைகளை கண்ட மகிழ்வு தாயின் உயிரைப் பறித்தது!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நீண்ட காலத்துக்குப்பின் வந்த பிள்ளைகளை கண்டவுடன் ஏற்பட்ட மகிழ்வினால், திடீரென மாரடைப்பு ஏற்பட்டு தாயார் ஒருவர் மரணமான சம்பவமொன்று ஈச்ச மோட்டையில் நடைபெற்றது.

நேற்று நண்பகல், கொழும்பிலிருந்து வந்த தமது பிள்ளைகளையும் உறவினர்களையும் கண்டவுடன் ஆரத்தழுவி மகிழ்வுற்றவேளை, திடீரென நிலத்தில் வீழ்ந்த அந்தத் தாய், திடீரென மரணமடைந்தார்.

ஈச்சமோட்டையைச் சேர்ந்த மேரி நீற்றா (வயது 65) என்ற இவர், ஏற்கனவே மாரடைப்பு நோயினால் பாதிக்கப்பட்டவர் எனவும் தெரிய வருகிறது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### தென்மராட்சி அதிபர்களுக்கு!

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலை அதிபர்களையும், யுனிசெப் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

இக்கற்றல் உபகரணங்கள் ஆண்டு 2 இற்கு உட்பட்ட மாணவர்களுக்கே வழங்கப்படவுள்ளதாகவும், இவற்றைத் தென்மராட்சியின் அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்களையும் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (25)

### யாழ்.நகரில் திருடர் தொல்லை அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

குறிப்பாக பஸ்களில் பயணம் செய்யும் - பயணிகளது பேர்ஸ்களே திருடர்களால் அதிகளவில் அபகரிக்கப்பட்டு வருகின்றது.

- இவ்வாறு திருடப்படும் பேர்ஸ்களில் இருந்து பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை திருடர்கள் அபகரித்து விட்டு, அடையாள அட்டை, வங்கிப்புத்தகம் போன்ற பொருட்களை கண்ட இடங்களிலும் தூக்கியெறிந்து விடுகின்றனர். இவ்வாறான சம்பவங்கள் கடந்த ஓரிரு வாரங்களாக நகரப் பகுதியில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (60)

### கலந்துரையாடல்

கல் உடைக்கும் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு, யாழ்.மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும் என்றும், இதில் கல்லுடைக்கும் தொழிற்சாலை உரிமையாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறும் மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார்.

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பாஷையூர்)

பாஷையூர் புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று மாலை 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - யாழ்.கல்விக் கோட்டத்தின் முனனாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இராஜகோபால் பிரதம விருந்தினராகவும், அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை வணபிதா. எம்.யேசுரட்ணம், இயக்குநர் வண. பிதா. சாள்ஸ் கொலின் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (119)

✪ ✪ ✪

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், நல்லூர் உதவிப் பிரதேச செயலர் இ.ரவீந்திரசர்மா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க)

### குருநகரில் அப்பிள் பழங்கள் அழிப்பு

குருநகர் சந்தையில் அழுகிய நிலையில் ஐந்து பெட்டிகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அப்பிள் பழங்களை, மாநகர சபையின் பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் பரீட்சித்தபோது, அவை மனித பாவனைக்கு உதவாதவையெனக கண்டறிந்து அவற்றை அழித்தார். இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.


நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜய், சிம்ரன் நடித்த
ப்ரியமானவளே
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
M.I. 2
(சி-544)



ராஜா யாழ்ப்பாணம்.
7 ஆவது ஜனத்திரள் வாரம்
விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

வசீகரா
2.30, 6.30 மட்டும்
THE MUMMY RETURNS
இன்றும் நாளையும்
காலை 10.30 - இரவு 9.30 மட்டும்
(சி-545)


## மறைந்தார் மாண்பு


அ.குமரகுரு (J.P.U.M.)

சாவு என்பது இயல்பானது. பிறந்தவர் இறப்பது என்பது வாழ்க்கையில் மாற்றவியலாத நீதியாகும். எனினும், சான்றோரின் சாவு ஒரு சமுதாயச் சங்கடத்தை உருவாக்குவது தவிர்க்கமுடியாதது.

இந்தவகையில் சட்டவாளர் அமரசேனாதிபதி குமரகுருவின் இறப்பு, சான்றோர் வரிசையின் சங்கடப்படக்கூடிய கழித்தல் கணக்காகியுள்ளது.

வல்வெட்டியில் பிறந்த அன்னார், காங்கேசன்துறையில் மணங்கொண்டு- சட்டத்தொழில் ஆற்றுகையில், தமிழரின் விடியல் நோக்கிய தந்தை செல்வாவின் அணியில் ஒருவராக அறிமுகமானார். தமிழரசுக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக, தளராப் பணிசெய்து தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் தனது ஆளுமைப் பணியை அடக்கத்தோடு ஆற்றினார். சொல்வன செய்து முடிக்கும் திறன் வாய்ந்த ஒரு சிலரில் அமரர் குமரகுரு அவர்களுக்கென்றோர் அழியாத இடமுண்டு.

சோர்வறியாச் செயலும், சிரித்த முகப்பாங்கும், யாரெனிலும் அணைத்துப் போகும் பேதமறியாப் பெருங்குணமும் அவருக்குரியவை. அவரை அறிந்தோர், அவரை அணைத்தோர், இந்த உண்மையை அறிவர். ஈட்டிய பொருளை உயர்ந்த பணி ஏதெனிலும் உவந்தளிக்கும் பண்பு இவரிடம் இருந்தது. இதனால் கற்றோரும்- மற்றோரும் மதிக்கும் கண்ணியனாக இவர் வாழ்ந்தார். போரின் கடுமை, இடப்பெயர்வு - பொருளிழப்புக்கள் எல்லாம் சேர்ந்து இச்சான்றோனைப் புலம்பெயரவைத்தது.

அறிவும் ஆற்றலும், கனிவும் கண்ணியமும், உயர்ந்த மனமும், ஊரறிந்த சார்பும் கொண்ட அமரர் குமரகுரு அவர்களின் இறப்பு - தமிழர் சமூகத்தில் சகலமட்டங்களிலும் அதிர்ச்சியும் வேதனையும் தெறிக்கும் அலைகளைத் தோற்றுவித்திருக்கும் என்பது வெளிப்படை.

சான்றோர் சாவிலும் வாழ்வர் என்பர். குமரகுரு அவர்களும் வாழ்வார்.

- பொன்.கணேசமூர்த்தி.



உலகெங்குமுள்ள உங்கள்
உறவினர்களுடன் துல்லியமாகவும்
துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில்
Inter Net மூலம்
தொடர்புகொள்ள
ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்
SRI MURUGAN
Tele Communication, Computer System & Agency Post Office, 303, K.K.S. Road, Jaffna.
T.P. 021-2222670, 2223588
FAX: 021-2223214
E.Mail: del.Smskr@eureka.lk
(சி-616)


## இன்றைய நாள் இனிய நாள்

**27-02-2003 - வியாழக்கிழமை**
**ஏகாதசி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | :- சௌபாக்கியம், காரிய வெற்றி, அதிக செலவு, தேக சுகக் குறைவு. |
| இடபம் | :- மனமகிழ்ச்சி, பெண்களால் நன்மை, திருடரால் கஷ்டம், பொருட்சேதம். |
| மிதுனம் | :- வாக்குக் கலகம், தார சுகத் தடை, நன்மதிப்பு, தொழில் சித்தி, மன நிறைவு. |
| கர்க்கடகம் | :- குடும்பனுகூலம், தனதானிய விருத்தி, பிரயாச மிகுதி, தொழிற் சிறப்பு. |
| சிங்கம் | :- ஆரோக்கியம், தொழில் சம சித்தி, தனித்த நிலை, புத்திர களஸ்திர மகிழ்ச்சி. |
| கன்னி | :- நிலைப் பிரிவு, பிரயாணக் கஷ்டம், பொருள் வரவு, சிநேக லாபம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- மனப்பயம், பொருள் விருத்தி, சிநேக லாபம், ஆபரண லாபம். |
| விருச்சிகம் | :- வாகன சுகம், சிநேக நன்மை, அதிக லாபம், பொருள் வரவு. |
| தனு | :- தரும காரிய சித்தி, பணச் செலவு, இல்லச் சிறப்பு, மனச் சந்தோஷம். |
| மகரம் | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, தேக மெலிவு, பெரியோர் ஆதரவு, மனக் கவலை. |
| கும்பம் | :- கல்வி விருத்தி, சிநேக நன்மை, பகைவரால் தொல்லை, திருடர் பயம். |
| மீனம் | :- தன லாபம், இனசன விரோதம், பிரயாணக் கஷ்டம், வீண்பழி கேட்டல். |

# அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்பாடு மிகவும் நல்ல விளைவுகளை தந்துள்ளது

## ஐரோப்பிய யூனியன் பாராட்டு

அரசாங்கமும் - விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மிக நல்ல விளைவுகளைத் தந்திருப்பதாகப் பாராட்டுத் தெரிவித்திருக்கும் ஐரோப்பிய யூனியன் இதுகுறித்து திருப்தி தெரிவித்திருக்கிறது.

ஐரோப்பிய யூனியன் கொழும்பில் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, பேச்சுக்களின் மூலம் காணப்பட்ட இணக்கங்களை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் இரண்டு தரப்புக்களும் கொண்டிருக்கும் நாட்டம் வரவேற்புக்குரியது.

அத்துடன் இருதரப்பு இணக்கப்பாடுகளுக்காகப் பாடுபடும் நோர்வேயையும், யுத்தநிறுத்தக் கண்காணிப்பை மேற்கொள்ளும் குழுவினரையும் ஐரோப்பிய யூனியன் பாராட்டியுள்ளது.

அத்துடன், அண்மையில் நடந்த யுத்தநிறுத்த மீறல்கள் பேச்சுக்களுக்கு ஆபத்தானதாக இருந்தபோதும் - இப்பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் முக்கியமானது.

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுவது மற்றும் வட - கிழக்குப் பகுதி மக்களின் .வாழ்க்கைத்தர உயர்வு என்பன குறித்து ரோக்கியோவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்றும் ஐரோப்பிய யூனியனின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கசிப்பு விற்ற இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபரொருவரை பொலிஸார் கைது செய்தனர்.

நாவாந்துறை ஐந்து சந்தி வீதியில் வைத்துக் கசிப்பு விற்ற நபரொருவரையே யாழ். பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். அதே வேளை, கொக்குவிலிலும் கசிப்பு விற்ற நபரொருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் இருவரையும் பொலிஸார் நீதி மன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர். (ரா)

## வை.எம்.சி.ஏ. பொதுக்கூட்டம்

(பாஷையூர்)

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு தலைவர் அருமைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (119)

## யாழ். வரும் உலக உணவு ஸ்தாபன பிரதிநிதிகள் குழுவுக்கு திட்ட அறிக்கை

(யாழ்ப்பாணம்)

உலக உணவு ஸ்தாபனத்தின் குழுவொன்று அடுத்த வாரமளவில் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது.

யாழ்.வரும் இக்குழுவினர் விவசாய, மீன்பிடி, கால்நடைத் திணைக்களங்களின் திட்டங்களை ஆராய்ந்து அதற்கான உதவிகளைச் செய்வார்கள் எனத் தெரியவருகிறது. இக்குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்காக ஐந்தாண்டுத் திட்டமொன்றைக் கடற்தொழில், நீரியல் வளத்திணைக்களம் தயாரித்துள்ளது.

இத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான தொழில்சார் உதவிகளை வழங்குவது, மீனவர்களுக்கான வீட்டுத்திட்டம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் பிடிக்கப்படுகின்ற மீன்களைப் பதனிடுதல், சந்தைப்படுத்தல் போன்ற வசதிகளை ஏற்படுத்தல் போன்றனவும் உள்ளடங்கியிருப்பதாகவும் தெரியவருகின்றது. (ரா)

## ஞானச்சுடர் வெளியீடும், பரிசளிப்பும்

(தொண்டமானாறு)

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் மாசி மாத 'ஞானச்சுடர்' வெளியீடும், 2002 இல் வாசகர் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பும் நாளை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



அண்மையில் கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்திற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள அங்குசென்ற ஆலய பங்குத்தந்தை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அடங்கிய குழுவினருடன் இந்திய மீனவர்களையும் படத்தில் காணலாம்.

# அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம்; ஜே.வி.பியை இணைக்கத் திட்டம்!

## அநுரா பண்டாரநாயக்க தீவிர முயற்சி

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதி கொழும்பில் பொதுஜன ஐக்கிய முன்னணி நடத்தத்திட்டமிட்டிருக்கும் பெரியளவிலான ஆர்ப்பாட்டப்பேரணியில் ஜே.வி.பியையும் பங்குபற்ற வைப்பதற்குரிய முயற்சிகளில் அநுரா பண்டாரநாயக்க ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணி இந்தப் பேரணியில் 10 லட்சம் பேரைத்திரட்டுவதென்ற இலக்குடன் செயற்பட்டு வருகின்றது. இதேவேளை, சமீபத்தில் ஜே.வி.பி நடத்திவரும் அரசாங்கத்திற்கு எதிரான பேரணிகளில் பெருமளவான பொதுமக்கள் கலந்துகொண்டு வருவதால், ஜே.வி.பியையும் இதில் இணைத்துக் கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக அநுரா பண்டாரநாயக்க தலைமையிலான குழுவுக்கும் ஜே.வி.பி. பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. எனினும் இதில் இறுதிமுடிவு எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, அரசாங்கத்திற்கு எதிரான பொ.ஐ.முவின் பேரணியில் 10 லட்சம் பொதுமக்களைக் கலந்துகொள்ள வைப்பது கடினம் என்பதாலேயே அநுரா ஜே.வி.பியின் தயவை நாடியுள்ளதாக ஐ.தே.க வட்டாரங்கள் தெரிவித்தன.

## வடமராட்சி கல்வி வலய மென்பந்துக் கிரிக்கெட் போட்டி

(நவிண்டில்)

வடமராட்சி கல்வி வலய மட்ட 19 வயதுக்குட்பட்டோருக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும். முதலாம் இடத்திற்கான போட்டி - யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கும் யாழ். ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையிலும் மூன்றாம் இடத்திற்கான போட்டி - யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும் யாழ். விக்கினேஸ்வராக் கல்லூரிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.(116)

## துப்பாக்கிச் சூட்டுடன் சிப்பாயின் சடலம் மீட்பு

(கொழும்பு)

வவுனியா கோழியகுளம் முன்னரங்க சோதனைச்சாவடிக்கு அருகில் கடந்த திங்களன்று தலையில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கெமுனு படைப்பிரிவைச் சேர்ந்த இச்சிப்பாய் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவராவார்.

திங்களன்று இரவு தமது சோதனைச்சாவடி அருகே கேட்ட துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களை அடுத்து தாம் அவ்விடத்துக்கு விரைந்தபோது தலையில் சூட்டுக் காயத்துடன் இச்சிப்பாய் கிடந்ததாக இவருடன் பணியாற்றும் சக சிப்பாய்கள் தெரிவித்தனர். இவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## சிறுவர் கடத்தல் குறித்த அறிக்கை சந்திரிகாவிடம் கையளிப்பு!

வட-கிழக்கில் சிறுவர்களைக் கடத்துவது தொடர்பாக ஆராய ஜனாதிபதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்ட பொலிஸ் குழுவின் விசாரணை அறிக்கை ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க தலைமையிலான ஐந்து பொலிஸ் குழுக்கள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, பொலனறுவ, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்குச் சென்று விசாரணைகளை நடத்தியிருந்தன.

இந்தப் பொலிஸ் குழுக்களின் அறிக்கைகளின் படி வட-கிழக்கில் 136 சிறுவர்கள் கடத்தப்பட்டதாக அல்லது காணாமற்போனதாகவும், இவர்களில் 110 பேர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்திருக்கிறது.

## குடாநாட்டில் கள்ளநோட்டு

யாழ்.நகரப் பகுதிகளில் 500 ரூபாய் கள்ளநோட்டுக்களின் புழக்கங்கள் அதிகரித்துள்ளன.

நகரப்புறப் பகுதியிலுள்ள சில இடங்களில் ஐநூறு ரூபாய் கள்ள நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கள்ளநோட்டுக்கள் தென்னிலங்கையிலிருந்து அச்சடிக்கப்பட்டு யாழ்.குடாநாட்டில் புழக்கத்திற்கு விடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ரா)

# இடைவிலகிய மாணவர்களை இனங்காண முறைசாராக்கல்வி முகாமைத்துவப் பிரிவு

## பொருத்தமான திட்டங்களும் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் செல்லாத, இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குக் கல்வி வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் நடவடிக்கையில் யாழ். வலயக் கல்வித் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவின் முகாமைத்துவப்பிரிவு மாணவர்கள் இந்த செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் கிராமம் கிராமமாகச் செல்லும் இந்த மாணவர் குழுவினர் அங்குள்ள கல்வி நிலைமைகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து வருகின்றனர்.

இந்தப் பகுதிகளிலுள்ள பாடசாலைக்குச் செல்லாத மற்றும் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு பாடசாலைக்குச் செல்லாதவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதுடன், இடைவிலகிய மாணவர்களுக்கு அவர்களின் ஆற்றலுக்கேற்ப மெல்லக்கற்கும் கல்வித் திட்டத்தில் சேர்த்து வருகின்றனர்.

அத்துடன், இவர்களுக்கு தொழிற் பயிற்சியும் வழங்குவதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்தவாரம் வாதரவத்தை, நவாலி, உரும்பிராய் பகுதிகளில் இந்தக் குழுவினர் மாணவர்கள் பற்றிய தகவலகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 60 யாழ். பாடசாலைகளுக்கு 'நிக்கொட்' தளபாட விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அறுபது பாடசாலைகளுக்கு நிக்கொட் அமைப்பினூடாக தளபாட வசதிகள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்தகால யுத்தசூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் மாணவர்களின் கல்வி வசதிக்காக இத்தளபாட வசதிகள் வழங்கப்படவுள்ளன.

அறுபது பாடசாலைகளில் - தென்மராட்சிப் பிரதேசத்தில் எட்டு பாடசாலைகளுக்கும், வலிகாமத்தில் 8 பாடசாலைகளுக்கும், யாழ். வலயத்தில் 25 பாடசாலைகளுக்கும், தீவக வலயத்தில் 12 பாடசாலைகளுக்கும, வடமராட்சி கிழக்கில் 10 பாடசாலைகளுக்கும் தளபாடங்கள் வழங்கப்படவுள்ளதாக நிக்கொட அமைப்பின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## உடல், உளப் பாதிப்பு; டென்மார்க் குழு ஆய்வு

குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தின் டென்மார்க் பிரதிநிதிகள் மூவர் நேற்றுமுன்தினம் யாழ்.வந்துள்ளனர்.

யாழ்.வந்த டாக்டர் ஜோ அஸ்வல், டாக்டர் ரீன் ஹேஸல்ட், சோர்ன் அர்ஸ்லர் ஆகியோரே நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு யாழ். கச்சேரிக்குச் சென்று திட்டப்பணிப்பாளர் சுந்தரம்பிள்ளையுடன், யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற நீண்டகால யுத்தத்தால் உடல், உள ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு எவ்வகையான உதவியை மேற்கொள்ளலாம் என்பது குறித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மேற்படி குழுவினர் ஆயர் இல்லம், யுனிசெப் நிறுவனம், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பணியகம், யாழ். பலகலைக்கழகம் ஆகிய இடங்களுக்கு விஜயத்தை மேற்கொண்டனர். யாழ். மக்களின் உடல், உள நிலை போரினால் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை ஆய்வு செய்யவுள்ளனர்.

## ஜனாதிபதி சந்திரிகா கஸ்ரோவைச் சந்தித்தார்

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கியூபாவின் ஜனாதிபதி பிடல் கஸ்ரோவை நேற்றுமுன்தினம் மலேசியாவில் சந்தித்தார்.

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருக்கும் ஜனாதிபதி- அங்கு கியூபா நாட்டு ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடியதாக ஜனாதிபதி செயலகத்தின் செயதிக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

## கல்வி நிர்வாகத்துறையில் திறமைசாலிகள் இல்லையாம்

### கல்வியமைச்சு அதிகாரி விசனம்

கல்வி நிர்வாகத்துறையிலும், அதிபர் தரத்திலும் திறமைசாலிகள் இணைவதில்லை என்று கல்வி அமைச்சின் மேன்முறையீட்டு ஆணையாளர் ஏ.எம்.ஆர். வி.அமரக்கோன் தெரிவித்தார்.

இவ்வாறு இணைவதன் மூலம தமக்கு உரித்தான சிறந்த கொடுப்பனவுகள் கிடைப்பதில்லை எனறு ஆசிரியர்கள் கருதுவது இதற்குக் காரணம் என அவர் கூறினார்.

இது தொடர்பாக அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. உரிய சிபார்சுகளுடன் அவற்றைக் கலவி அமைச்சின் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகவும்,

கல்வி நிர்வாகத்துறையிலும், அதிபர் தரத்தில் இணையும் ஆசிரிய, ஆசிரியைகளுக்குக் கூடுதல் சம்பளதைத வழங்குமாறு யோசனை வழங்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

## கருத்திட்டம் சம்பந்தமான கூட்டம்

(நவிண்டில்)

இமையாணன் கிராம அலுவலர், கரணவாய் வடமேற்கு கிராம அலுவலர் பிரிவுகளில் "கருத்திட்டம்" சம்பந்தமான கூட்டம்- கரவெட்டி பிரதேச செயலாளர் க.கனகரத்தினம் தலைமையில், கரணவாய் வடக்குத் தாமோதர வித்தியாசாலையில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் நடைபெறும். இக்கூட்டத்தில் பொதுஸ்தாபனங்கள், நலன் விரும்பிகள் கலந்து, தமது கிராமத்தின் தேவைகள் பற்றிக் கலந்துரையாடலாம் என ஏற்பாட்டாளரான இமையாணன் கிராம அலுவலர் ந.கந்தசாமி தெரிவித்தார். (116)

## வீட்டு உறுதி வழங்கல

குருநகர் 5 மாடித் திட்டத்தின் கீழ் 1983 இல் கையளிக்கப்பட்ட வீடுகளின் ஆரம்பக் குடியிருப்பாளர்களுக்கான வீட்டு உறுதிகள் வழங்கப்படவிருப்பதால் - வீட்டின் உரிமையாளர்களை வீடமைப்பு அதிகார சபையின் காரியாலயத்தில் வந்து சந்திக்குமாறு பொதுமுகாமையாளா கேட்டுக்கொண்டுள்ளார். (119)

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் : க.சுபாங்கி

முகவரி: கிராம்புவில், சாவகச்சேரி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

-----------------------------

பெற்றார் ஒப்பம்

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 31 - ச.ஆ.கோபாலமூர்த்தி.

**புற்றுநோயும் நீரிழிவு நோயாளரும்...** (தொடர்ச்சி)

வாயின் உட்புறச்சுவரில் அல்லது முரசின் ஒரு பகுதியில் வெண்மை நிறம் தெரிந்தால் பல்வைத்தியரிடம் காட்டி, அது புற்றுநோயின் ஆரம்பமா? இல்லையா? என அறியவேண்டும். முதுமையை நெருங்கும் பெண்களின் யோனிமுகப்புப்பகுதியின் (VULVA) நிறம் வெள்ளையாக மாறினால் பெண் நோய் வைத்திய நிபுணரிடம் காட்டி, அது புற்றுநோயின் ஆரம்பமா? இல்லையா? என அறிதல் வேண்டும். மார்பில் கட்டி ஏற்படின், FNAC (FINE NEEDLE ASPIRATION CYTOLOGY) பரிசோதனை, 'மமோகிராம்' போன்ற சோதனைகளைச் செய்து புற்றுநோயா என ஆரம்பத்தில் கண்டறிதல் வேண்டும். 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் ஆண்டுக்கு ஒரு தடவை PAP SMEAR சோதனை செய்வித்து, கருப்பை சார்ந்த இடங்களில் புற்றுநோய் ஏற்படுகிறதா என முன்கூட்டியே அறிதல் வேண்டும். இரத்தத்துடன் கூடிய நீடித்த இருமல், மாறாது வளரும் புண், பாலுண்ணி, மச்சம் போன் வற்றில் அழற்சி, விழுங்குவதில் சிரமம், மலச்சிக்கலும், வயிற்றோட்டமும் மாறிமாறி ஏற்படல், அசாதாரண மாதவிடாய் போன்றன காணப்படின் வைத்தியரிடம் சென்று உரிய பரிசோதனைகள் செய்வித்தல் அவசியம்.

**குடற்புழுத்தொற்று நீரிழிவு நோயாளருக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள்**

சுகாதாரமற்ற நிலையில் பேணப்படுபவையும், ஈ, எறும்பு, கரப்பான் பூச்சி போன்றவற்றுடன் தொடுகையுள்ளவையுமான உணவுகளின் மூலமும், பாதணியற்று உலாவும் வேளைகளிலும், மண்ணுடன் தொடுகையுற்று பொருட்களை அல்லது மண்ணைக் கைகளால் அளையும்போதும் உள்ளங்கால், உள்ளங்கை, விரல்இடைப்பகுதிகளில் தோலைத் துழைத்தல் மூலமும் சாதாரணமாகக் குடற்புழுக்கள் தொற்றும். கீரைப்புழு அல்லது தானப்புழு என அழைக்கப்படும் குடற்புழுக்கள், குதத்திலும் அதன் அயலிலும் சொறிவை ஏற்படுத்தும். இப்புழுத் தொற்றுடையோர், பகலில் சொறிவு குறைவாக இருப்பதாலும், பக்கத்திலுள்ளோர் அவதானிப்பார்கள் என்பதாலும் பகலில் சொறிவதைத் தாங்கிக்கொள்வார்கள். இரவு, நித்திரையில் அவர்களை அறியாமலே விறாண்டிச் சொறிந்து விடுவார்கள். நகக் கீறல்களால் இப்பகுதியில் புண்கள் ஏற்பட்டு, நீரிழிவு நோயாளருக்குத் தொல்லை கொடுக்கலாம். சொறிந்த நகங்களில் இப்புழுமுட்டைகள் ஒட்டியும் அடைபட்டும் இருந்து, கைகழுவாது உணவுகள் தயாரிக்கும்போது (பாணை வெட்டுதல், பழப்பாணியைப் பாணுக்குப் பூசுதல் போன்ற வேளைகளில்) பிறருக்கும் தொற்றும். பிறரது சாரம், பாவாடை போனற உடைகளை அணிவதும் பிறரது படுக்கை விரிப்புகளில் படுப்பதும் இந்த நோய்த்தொற்றை ஏற்படுத்தும் ஏனைய சந்தர்ப்பங்கள் ஆகும. மிருகங்களிலிருந்தும் சில குடற்புழுக்கள் மனிதருக்குத் தொற்றும்.

பன்றி இறைச்சியில் காணப்படும் 'ரீனியா' சோலியம் என்ற நாடாப் புழுவும், மாட்டிறைச்சியில் காணப்படும 'ரீனியா' சகிநேற்றா' என்ற நாடாப் புழுவும் நன்கு அவிக்காத இறைச்சி, பாபிக்கியூ (BARBECUE) எனப்படும் வாட்டிய இறைச்சி என்பனவற்றின் மூலம் மனிதருக்குத் தொற்றுவதுண்டு.

பண்பாடற்ற முறையில் நாய் வளர்ப்பவர்கள் யாழ்ப்பாணத்தில் பெருகிவிட்டார்கள். இவர்கள், தங்களது வளர்ப்பு நாய்களை வீதிகளுக்கு அனுப்பி, வீதிகளில் நாய்கள் மலங்களிப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். இதனால், இன்று யாழ்ப்பாணத்தில் நாய்மலம் இல்லாத வீதிகளே இல்லை என்று கூறும்நிலை தோன்றியுள்ளது. நாய்மலம் உலர்ந்தும் சிதைந்தும் வீதிமுழுவதும் பரவுகிறது. இதனால், நாய்மலத்தில் காணப்படும் ஆழ் சுரங்கம் குடையும்புழுக்கள் என அழைக்கப்படும் உள்ளூறுப்புக்களை ஊடறுத்து அங்குமிங்கும் திரிகின்ற (VISCERAL LARVA MIGRANS) புழுக்களின் முட்டைகள் வீதியில் பரவியிருக்கும்.

தொடரும்....



## நமது ஈழநாடு வழங்கும்




# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **என்.எஸ். இரத்தினம்**

*(இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்)*

6, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.

ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிள்களின் வவுனியா விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: **1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்**

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



**2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)**

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்யாட்**

531, பருத்தித்துறை வீதி, நல்லூர். பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

Fancy goods, gift items, fevicryl & acron paint items.

மூன்றாவது ஆறுதல் பரிசு

வழங்குவோர்: **யாழ்.வணிக நிலையம்**

இல.302, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



**இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்! வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!**

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ----------------------------------------

வயது: ----------------------------------------

முகவரி: ----------------------------------------

----------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# போசணையிலும் உடல்நலத்திலும் மீனின் பங்களிப்பு

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

மிக ஆதிகாலந்தொட்டே மனித உணவில் மீனானது ஒரு நிரந்தர புரதப் போசணைக் கூறாக, ஒரு சில மனிதக்குழுக்கள் தவிர்ந்த எல்லோராலும் உண்ணப்பட்டு வருகின்றது. மீனானது ஜப்பான், ஹவாய தீவுகளில் சமைக்காது உண்ணப்படுகின்றது ஆயினும், உலகெங்கும் இது சமைத்தல், புகையூட்டல், உப்பிடல் போன்ற பல்வேறு முறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே உண்ணப்படுகின்றது.

மீனுடலானது பொதுவாக வெண்ணிற, விரும்பத்தக்க சுவை, மணம் உடையதாக இருப்பினும் - சில குறிப்பிட்ட இனங்கள் நீர்த்தன்மை கூடிய அல்லது உலர்ந்த, சுவையற்ற, என்புகள் நிறைந்த, விரும்பத்தகாத மணமுடைய, கொழுப்பு, எண்ணெய் உடையனவாகவும் காணப்படுகின்றன. மாடு மற்றும் ஏனைய விலங்குகளின் இறைச்சிகளின் சமிபாட்டைப் போலவே மீனின் புரதக் கொழுப்பு கூறுகளின் சமிபாடும் மனிதனில் இலகுவாக உள்ளது. தகரத்தில் அடைத்த **Salmon** மற்றும் **Mackeral** மீன்களில் முறையே 93.2%, 93.1% வீதமான புரதங்களும், 93.7%, 95.2% கொழுப்பும் மனிதனால் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது.

இன்றைய உலகில் 450 மில்லியன் மக்கள் போசணைக் குறைபாட்டுடன் வாழ்கின்றார்கள். அவர்களுக்கான புரத உணவுத் தேடலுக்கான அவசியம் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது. இவ்வாறு உள்ளநிலையில் மீன் எவ்வகையில் இப்பிரச்சினைக்கு நடைமுறைத்தீர்வாக அமையும் என்பதே உலக மக்களின் பிரதான அக்கறையாகவுள்ளது.

மீனானது விருப்புக்குரிய போசணை நிறைந்த ஓர் உணவாக, நீண்டகாலமாக அங்கீகரிக்கப்பட்டு வந்துள்ளது. எல்லாக் கடற்கரையோர நாகரிகங்களின் தொல்பொருள் ஆய்வுக்கான அகழ்வுகளின்போது குவியல் குவியல்களாகக் கிடைக்கப்பெற்ற சிப்பிகள், மீனென்புகள் என்பன மீனானது பன்னெடுங்காலமாக உணவாகப் பாவிக்கப்பட்டு வந்துள்ளது என்பதற்குச் சான்றாக அமைகிறது.

பண்டைய எகிப்திய மக்கள் மீனை வெயிலில் காயவைத்தல், உப்பிடல், உப்பிட்டு உலர்த்தல் போன்ற முறைகளில் பேணி ஆண்டு முழுவதும் பயன்படுத்தி வந்தனர். சீனர்கள் பன்னெடும் காலமாக மீன்களைத் தடாகங்களில் வளர்த்து பயன்படுத்துவதன்மூலம் தமது தேவையைத் தொடர்ச்சியாகப் பூர்த்திசெய்து வருகின்றனர்.

சமூக, பொருளாதார, புவியியற் காரணிகளால் பகுக்கப்படுகின்ற உலக சனத்தொகையினரின் பெரும்பகுதியால் பெறுமதிமிக்க உணவாக மீன் இன்று கருதப்படுகின்றது. மீனினது போசணைப் பெறுமானத்தை நோக்குமிடத்து அது இறைச்சி, பால் என்பவற்றுக்கு ஒப்புவமை உடையதாக உள்ளது. மீனானது 18% தொடக்கம் 22% வரையாக இலகுவில் சமிபாடடையக்கூடிய புரதங்கள், ஏனைய விலங்குப் புரதங்கள் மற்றும் மனிதனால் தொகுக்கமுடியாத அத்தியவசிய அமினோ அமிலங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. குறிப்பாக மீனில் லைசீன் எனப்படும் அத்தியாவசிய அமினோ அமிலம் அதிகளவில் காணப்படுகின்றது. இதனால் இது வளர்முக நாடுகளில் காணப்படும் உயர் காபோவைதரேற்று, தாழ் புரத பெறுமானமுடைய உணவுகளுக்குச் சிறந்த பதிலீட்டு உணவாக அமைகின்றது.

| மாமிசப் பொருட்கள் | நீர் (% இல்) | புரதம் (% இல்) | கொழுப்பு (% இல்) | ஏனையவை |
|---|---|---|---|---|
| மீன் | 53 - 89 | 9-26 | 3-10 | 1-2 கல்சியம் |
| கருவாடு | 10-55 | 40-62 | 3-10 | 0.08-2.4 |
| சிப்பிகள், மட்டிகள் | 77-83 | 9-13 | 1-3 | 1-7 |
| | | | | காபோபைதரேற்று |
| சூடைமீன் | 72.8 | 20.9 | 3.2 | 0.43 |
| இறால் | சுமார் 75 | 20 | 0.4-1.2 | - |
| சிங்கறால் | 72-75 | 21-14 | 1.5-2.0 | 2-3 |
| நண்டு | 71-74 | 19-24 | 0-6 | 1-2 |
| கணவாய் | 78 | 15-19 | 1.1-1.5 | - |
| கோழி இறைச்சி | 74% | 20% | 0.4-18% | - |
| ஆட்டிறைச்சி | 49% | 15% | 35% | - |
| மாட்டிறைச்சி | 67% | 19% | 14-20% | - |

அத்துடன், மீனானது ஏனைய முக்கிய போசணைக்கூறுகளான **A, B, D** போன்ற விற்றமின்களையும் - கனியுப்புக்களான கல்சியம், பொசுபரசு, இரும்பு, அயடின், புளோரின் என்பவற்றைக் கொண்டுள்ளது. சூடை (**Sardines**)





போன்ற சிறிய மீன்களின் என்பில் அதிகளவு கல்சியம், பொஸ்பரஸ் என்பன காணப்படுகின்றது.

கடல் மீன்களில் அயடின், ஒமேகா -3 கொழுப்பமிலம் என்பன குறிப்பிட்டத்தக்க அளவில் காணப்படுகின்றன. இவை மனிதனது குருதியிலுள்ள கொலஸ்ரோல் முக்கிளிசரைட்டுகளின் செறிவை ஆபத்து அற்றவிதத்தில் பேணும்.

மீனின் உடற்பகுதிகளான தசைகள், என்புகள், உடல் அங்கங்கள் என்பன விற்றமின் **A**, இரும்பு, அயடின் போன்ற போசணைக்கூறுகளை அதிகளவு கொண்டுள்ளன. இவ்விற்றமின், கனியுப்புக்களின் குறைபாட்டினால் மனிதனுக்கு ஏற்படும் மாலைக்கண், குருதிச்சோகை, கண்டக்கழலை போன்ற குறைபாடுகளை மீனுணவைத் தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் தவிர்த்துக்கொள்ள முடியும்.

**கலாநிதி**
**கா.சித்திரவடிவேல்**

மீனுடலின் வெவ்வேறு பாகங்களில் காணப்படும் போசணைக் கூறுகளானது இசுமி (**Isumi**) எனும் ஜப்பானிய விஞ்ஞானியால் பகுத்தாராயப்பட்டது. அவரது ஆய்வின்படி மீன் கண்களிலும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் அதிகளவில்

ரெட்டினோல் (விற்றமின் A)
தயமின் (விற்றமின் B1)
ரைப்போபிளேவின் (விற்றமின் B2)
காபோவைதரேற்று என்பன காணப்படுகின்றன.

*(தொடரும்)*

# தனிமனித ஆளுமை விருத்தி

**சென்றவாரத் தொடர்ச்சி...**

இந்நிலையைமாற்றி, பல்கலைக்கழகங்களில் மாணவரின் ஆளுமையை விருத்தி செய்யக்கூடிய திடகாத்திரமான திட்டங்கள் அவர்களின் பாடவிதானத்துடன் சேர்க்கப்பட வேண்டும். இவற்றிற்குப் பின்வரும் செயற்பாடுகள் உறுதுணையாக அமையலாம்.

**ஆங்கில அறிவு விருத்தி**

பல பீடங்களில் போதனை ஆங்கில மொழியில் இருந்தாலும், நான்கு வருடம் ஆங்கிலத்தில் கல்விகற்று வெளியேறும் மாணவரின் ஆங்கில அறிவு மிகக்குறைவாகவே இருக்கிறது. கற்பிக்கும் ஆசிரியரின் ஆங்கிலத்திறமை, கற்பிக்கும்முறை, ஆங்கில நூல்களை வாசித்து, அதன் மூலம் தங்களுக்குக் கொடுக்கப்படும் வேலைகளைத் திறமையாகச் செய்துமுடித்தல், ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் ஏனைய வேலைகளை (**Assignment**) ஆங்கிலத்தில் தயாரித்து அதைக் கூட்டத்தில் வாசித்து, விவாதித்தல் போன்ற செயல்முறைகள் ஆங்கில அறிவை வளர்க்க உறுதுணையாக இருக்கும்.

அத்துடன் சகல வசதிகளையும் உள்ளடக்கிய, ஆங்கில அறிவைப் பல நவீன யுக்திகளைக் கையாண்டு கற்பிக்கும் ஒரு தனியானதுறை பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட வேண்டும். இத்துறையை உருவாக்கி ஆரம்பகாலத்தில் சிறப்பான சில ஆங்கில ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் பொறுப்பை **British Council** போன்ற நிறுவனத்துடன் கூட்டுச்சேர்ந்து நிறைவேற்றலாம்.

**கணினி அறிவும், பயிற்சியும்**

பொதுவான கணினி அறிவும், மாணவர்கள் கல்விகற்கும் துறைகளில் அவற்றின் செயல்முறை கற்றலில் வினைத்திறனான கணினிப்பாவனையும் பல்கலைக்கழகங்களில் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் தற்பொழுதுள்ள வசதிகள் போதாதநிலையில் இருப்பது ஒரு குறைபாடாகவுள்ளது. இவை நிவர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்தில் எந்தவொரு மாணவனும் தான் விரும்பிய நேரத்தில் கணினியை சுதந்திரமாகப் பாவித்து அறிவைப் பெருக்கக்கூடிய அளவில் வசதிகள் செய்யப்படவேண்டும். செய்தித்தொடர்புகளையும், பாடவிதானத்துடன்கூடிய தகவல்களையும் கணினிவலைப்பின்னலூடாக சகல மாணவர்களும் பெற்று தமது கல்வியை மேம்படுத்தும் சிறப்பான அமைப்புமுறை ஏற்படுத்தப்படவேண்டும்.

**சிறப்பான நூலக வசதி**

அபிவிருத்தியடைந்த நாடுகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் தமக்கு வேண்டிய அறிவையும், தகவல்களையும் நூலகத்தில் நூல்களை வாசித்து அறிவதன் மூலமும் கணினி வலைப்பின்னல் மூலமும் பெற்று விருத்திசெய்து கொள்கிறார்கள். அங்கு கடமைபுரியும் பல ஆசிரியர்களும் இவற்றை நடைமுறைப்படுத்தும் ஏற்பாட்டாளர்களாகவே (**Facilitators**) தொழிற்படுகிறார்கள். மாணவர்கள் தங்களது பட்டத்தை நூலக வாசனைமூலம் பெற்றுக்கொள்ளவேண்டும். இங்கே எமது மாணவர்கள் தமது அறிவை வளர்க்கவும், தகவல்களைப் பெறவும் நூலகத்தைப் பயன்படுத்தும் தன்மை மிகக்குறைவாக இருக்கிறது. மாணவர்கள் தங்கள் ஆளுமையை விருத்தி செய்வதற்கு இத்தகைய செயற்பாடு இன்றியமையாதது. நாம் நாளாந்தம் செய்யும் கருமங்களைப்போல நூல்களைப் படிப்பதை ஒரு நாளாந்தக் கருமமாக சகல மாணவர்களும் பழகிக்கொள்ள வேண்டும்.

**எஸ்.ராஜதுரை**
**விவசாய பீடாதிபதி,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

**நிர்வாகப் பயிற்சி**

பல்கலைக்கழக மட்டத்தில் சகல பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் நிர்வாகப் பயிற்சி வழங்குவது மிக அவசியமாகும். தொழில் நிர்வாகம், நிதிநிர்வாகம், வியாபாரம், சந்தைப்படுத்தல் போன்ற துறைகளில் வழங்கப்படும் பயிற்சிகள் அவர்களின் ஆளுமையை வளர்ப்பதுடன் சிறந்த தொழில்வாய்ப்பைப் பெறவும் உதவுகிறது.

மேலே கூறப்பட்டவாறு பெற்றோரும், கல்வி நிலையங்களும் மாணவர்களின் ஆளுமை விருத்தியில் ஆக்கபூர்வமான பங்கை வகித்தாலும் இதிலே பூரண வெற்றிபெறுவது ஒவ்வொரு மாணவனும் இதன் முக்கியத்துவத்தை விளங்கிக்கொண்டு தனது ஆளுமையை விருத்தி செய்யக்கூடிய செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செயற்படுவதில் தங்கியுள்ளது.

✷

# சேது சமுத்திரத் திட்டம்

## ஓர் பார்வை

**சென்றவாரத் தொடர்ச்சி...**

**சேது** சமுத்திரக் கால்வாய் வழியில் அமையும் கப்பற்பாதை வழமையாக இலங்கையைச் சுற்றிக்கொண்டு செல்லும் பாதைக்கு மாற்றாக அமையவேண்டும். இது சாத்தியமாக அமைய வேண்டுமானால், இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் கப்பல்களுக்குக் கிடைக்கும் வசதிகள் தூத்துக்குடித் துறைமுகத்திலும் கிடைக்க வேண்டும். இதற்காகவும் இன்னும் பல காரணங்களுக்காகவும் தூத்துக்குடி துறைமுக மேம்பாட்டுத் திட்டமும், இச்சேது சமுத்திரத் திட்டத்துடன் இணைந்ததாகக் கருதப்பட வேண்டும் என்பது இக்குழுவின் முடிவாகும். இவர்களின் திட்டத்திற்கான செலவு மதிப்பீடு 9.98 கோடி ரூபாவாகும். இதனைத் தொடர்ந்து தமிழக அரசு 1963 ஆம் ஆண்டு 26 அடியிலிருந்து 30 அடி ஆழத்திற்குத் திட்டத்தை மாற்றியது. இதன் செலவு 21 கோடி ரூபாவாகும்.

இத்திட்டத்தின் மூலம் கன்னியாகுமரியிலிருந்து கப்பல்கள் சென்னை, விசாகப்பட்டினம், கல்கத்தா போன்ற துறைமுகங்களுக்குச் செல்வதில் தூரமும், பயணத்தின் நேரமும் குறையும் என்பது முக்கியமானதாகும். இதன் அடிப்படையில் 1963 ஆம் ஆண்டு தூத்துக்குடித் துறைமுக மேம்பாட்டுத்திட்டம் அரசினால் அனுமதிக்கப்பட்டு, இதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்கு அப்போதைய போக்குவரத்துத் துறைச்செயலாளர் தலைமையில் ஓர் உயர்மட்டக்குழு 1964 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் ஏற்படும் செலவை மதிப்பிடுவதற்கு ஒரு துணைக் குழுவும், திட்டத்தின்மூலம் ஏற்படும் வருவாயைக் கணக்கிடுவதற்கு ஒரு துணைக்குழுவும் அமைக்கப்பட்டது.

1968 ஆம் ஆண்டு திட்டத்தின் எல்லாக் கூறுகளும் ஆராயப்பட்டு உயர்மட்டக்குழுவால் 30 அடி ஆழமான போக்குவரத்து வசதி கொண்ட "சேது சமுத்திரக்கப்பல் கால்வாய்த் திட்டம்'' என அழைக்கப்பட்டது. இதன் மதிப்பீடு 37.46 கோடி ரூபாவாகும்.

இக்குழுவின் பரிந்துரையானது பின்வருமாறு அமைந்தது.

இத்திட்டமானது,

★ பொருளாதார அடிப்படையில் வரவு/செலவுப்பின்னணியில் ஏற்கத்தக்கது.

★ தேசிய நெடுஞ்சாலைகள் போல் (**National Highways**) இது கடல் வாணிபத்திற்கு தேசிய கடற்சாலைகள் (**National Seaways**) அமைய உதவும்.

★ நாட்டின் பாதுகாப்புக் கோணத்திலும் இது முக்கியத்துவம் வாய்ந்தது.

இக்குழு பல கால்வாய்ப்பாதைகளை ஆராய்ந்து இறுதியாக இராமேஸ்வரம் தீவு வழியாக ஒரு கால்வாய் அமைக்கப் பரிந்துரைத்தது. இது முதலியார் குழுவின் பரிந்துரையில் இருந்து கிழக்கே தள்ளிக் காணப்பட்டது.

1963 இல் அமைச்சரவை முடிவு தெளிவாக இருந்தும் ஆரம்பம் முதல் மத்திய அரசு மேற்கொண்ட இக்கால்வாய்த்திட்டம் பற்றிய ஆய்வுகள் யாவும் இந்தியாவின் நலன், பொருளாதார ரீதியில் சாதகமானதாக இருந்த போதிலும் - சில புரியாத, அடையாளம் தெரியாத, முறையான விளக்கமும் இன்றி 1989 இல் இது பொருளாதார ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என மத்திய அரசு அறிவித்தது. இவ்வறிவிப்பானது இத்திட்டம் பற்றி பல எதிர்பார்ப்புகளோடு இருந்த தமிழ் நாட்டிற்குப் பலத்த ஏமாற்றத்தை அழித்தது. இதன் பின்னர் 1860 ஆண்டு தொடக்கம் எண்ணற்ற குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட இத்திட்டத்தை ஆராய்வதற்கென 1981 இல் மத்திய அரசின் கப்பல் போக்குவரத்து மேம்பாட்டுத் துறை ஆலோசகர் ஆர்.லட்சுமிநாராயணன் தலைமையில் (2-2-81) ஐவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவும் இத்திட்டத்தை பரிந்துரைத்த போதிலும் இத்திட்டம் நிறைவேற்றுவதற்கான

**கலாநிதி எஸ்.சூசை ஆனந்தன்**

வாய்ப்பு பிரகாசமடையவில்லை. 1982 இல் தமிழ்நாடு சட்டசபை தொடக்கம் பல்வேறு மட்டங்களிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் எனக் கோரிக்கை எழுப்பப்பட்டது. அத்துடன் கால்வாயைப் பொறுத்தவரையில் அங்குள்ள பொதுமக்கள் இராமேஸ்வரம்வரை வரும் பக்தர்களின் நலனைக்கருதி குறுகலான தனுஷ்கோடிப் பகுதியில் கோதண்டராமசாமி கோயிலுக்குச் சற்று மேற்கே அது அமையவேண்டும் என விரும்பினார்.

இவ்வாறு காலங்காலமாகப் பல குழுக்களினால் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைகள் கொடுக்கப்பட்டும் வந்த இத்திட்டமானது இன்னும் பூர்வாங்க நடைமுறையிலேயேயுள்ளது. ☆

# வெங்காயச் செய்கையாளரைப் பாதிக்கும்



# காலநிலை மாற்றமும், சந்தை வாய்ப்பின்மையும்

**யாழ். குடாநாட்டில் வெங்காயப் பயிர்கள் என்றுமில்லாதளவு பரவலாக பயிரிடப்பட்டு, தற்பொழுது அறுவடை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.**

**இந்தக் காலப்பகுதியில் வெங்காயப் பயிர்ச்செய்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி நமது நிருபர் கலந்துரையாடியபோது, அவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.**

**முத்தையா தபேந்திரன்**

**(இராசவீதி - கோப்பாய்)**



நான் நீண்டகாலமாக இந்த இடத்தில் தோட்டம் செய்துவாறன். போனமுறை மழை காலம் மாறிப் பெய்ததால், என்னுடைய வெங்காயச் செய்கை பழுதடைந்து போட்டுது. அதனால் நான் பெரிதாக நட்டம் அடைந்துபோனேன். மீண்டும் நான் வட்டிக்குக் கடன் வாங்கிச் செய்தனான். நல்ல விளைச்சல் விளைஞ்சுது. வெங்காயம் பழுதடையாமல் பிடிகட்டி வைச்சன். முதல் பாதை திறக்காமல் இருந்தபடியால் ஏற்றுமதி இல்லை. வெங்காயம் கிலோ 5 ரூபாய் விற்றது. சாப்பாட்டிற்கு அரிசி சாமான் வாங்கி தினமும் ஐம்பது, அறுபது கிலோ எனச் சந்தையில் விற்று வந்தனான். எனக்கு முதல் அழிஞ்சுபோச்சுது. இதனால் எனக்கு 51,000 ரூபாய் நட்டம் கிடைச்சது. மனைவியின் நகையை அடைவு வைத்துத்தான் தோட்டம்செய்து நட்டப்பட்டு பிறகு அதை மீட்கிறதுக்கு வட்டிக்காசு 16000 ரூபாய் செவ்வாய்க் கிழமை என்றும் பாராமல் இன்றைக்குக் கொண்டுபோய்க் கொடுக்கிறன்.

மிகவும் ஏழை விவசாயியான நான் அடைவுவைத்தோ, யாரிடமாவது கடன் வாங்கியோதான் தோட்டத்தைச் செய்கிறனான். எனக்கு நட்டம் ஏற்பட்டால் எவ்வாறு அதைக்கட்டுறது. விதைவெங்காயத்தை அச்சுவேலி, இடைக்காட்டில்தான் வாங்கித் தோட்டத்தைச் செய்கிறேன். இப்படித்தான் தோட்டம்செய்து நான் மிச்சம் நட்டமடைந்து வறுமைநிலைக்கு வந்திருக்கிறன்.

முந்திப் போர் நடக்கும்போது விவசாயிகளிற்கு வங்கிகள் கடன் வசதி எதனையும் கொடுக்க முன்வருவதில்லை. தற்போது சமாதான நிலையில் வங்கிகளில் ஓரளவு கடன் பெறக்கூடியதாக இருந்தாலும் அவயின்ர தவணைக்குள் கட்டத் தவறினால் அது பெரிய பிரச்சினை. அதோட பிணை வைக்கிற இரண்டு பேரும் என்னைத் தொந்தரவு செய்வினம். இதனால்தான் நான் வங்கிகளை நாடுவதில்லை. யாரிடமாவது கூட வட்டியென்றாலும் ஆறுதலாகக் கட்டலாம். இதனால்தான் உள்ளூரில் யாரிடமாவது கடன் வாங்குகிறோம்.

அத்துடன் A.P.C (ஏ.பி.சி.) மூலம் 25,000 ரூபாய் கடன் வழங்குகிறார்கள். 8% வட்டி, இருவர் பிணை வழங்க, மூன்று தவணைக்குள் பணம் கட்டியாக வேண்டும். பத்துப் பேருக்கு ஒரு ரொபின் நீரிறைக்கும் இயந்திரம், மருந்து தெளிகருவியும் A.P.C வழங்கியது. ஆனால், எங்களிற்கு இதனால் எவ்வித பலனோ, நன்மையோ கிடைக்கயில்லை. இதனால் எங்களைப்போல ஏழைத் தோட்டக்காரர்களுக்குப் பிரயோசனமில்லை.

**நடராஜா சிவகுமார்**

**(உரும்பிராய்)**



போர்க்காலங்களில் உற்பத்தி செய்த பொருட்களைப் போக்குவரத்துப் பிரச்சினையினால் ஏற்றுமதி செய்ய இயலாமல் இருந்தது. அத்துடன் தோட்டம் செய்யிறதுக்கு உரவகை, எரிபொருள் எமக்குக் கிடைக்காமையினால் நாம் திறம்படத் தோட்டத்தைச் செய்ய முடியாமல் இருந்தது.

பாதை திறக்குமுன் உள்ளூரிலேயே எங்கட உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்தோம். அதனால் உற்பத்திச் செலவிற்கு லாபம் போதாமையால் நட்டம் அடைந்திட்டோம். தற்போது செலவினங்கள் போனாலும் ஓரளவு இலாபம் அடையிறம். பாதை திறந்த பிறகு எரிபொருள், உரவகை கிடைப்பதால் பிரச்சினை இல்லை. தற்போது வங்கிகளில் கடன் பெறக்கூடியதாகவும் உள்ளது. பிரச்சினை காலத்தில் வங்கியில் கடன் தாறதில்லை. தற்போது விவசாயிகளிற்கு வங்கிகள், நிறுவனங்கள் உதவிகள் செய்கிறார்கள். விவசாயிகளின் நன்மைக்காக வங்கிகளில் வட்டிவீதம் குறைத்து எடுக்கிறார்கள். இவ்வாறு விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் செயற்படுகிறார்கள்.

இடம்பெயர்ந்து ஊருக்கு வந்தபிறகு இரண்டு வருடங்கள் மிகவும் கஷ்டமடைந்தோம். ஏனெனில் சாமான் விலை ஏறிவிட்டது. தோட்டம் செய்து பிழைக்க இயலாமல் இருந்தது. ஆனால் இப்ப நிலைமை பரவாயில்லை.

**சின்னத்துரை இரத்தினேஸ்வரன்**

**(நீர்வேலி)**

இவ்வளவு காலமும் நட்டத்திலதான் விவசாயத்தைச் செய்து வந்தோம். பிரச்சினைகாலத்தில செலவுகளும்கூட. ஆனால் சந்தையில் வெங்காயத்தின் விலை மிகக் குறைவு. வங்கிகளில் கடன் வாங்குவது பிரச்சினை. சிலநேரம் வெங்காயச்செய்கை அழிந்தால் கடன் கட்ட முடியாதநிலை ஏறபட்டுவிடும். பிணை வைத்தவர்கள் தினமும் வந்து எம்மை கஷ்டப்படுத்துவார்கள். இதை விடச் சும்மா இருந்திடலாம்.



முன்னைய காலத்தில ஐக்கிய நாணய சங்கம் உதவி செய்தது. A.P.C. மூலம் மட்டுப்படுத்தி மட்டும் கடன் வழங்குகிறார்கள். இதனால் நாம் முழுமையாகப் பயன்பெறமுடியும் என்று கூறமுடியாது. சில சமயங்களில் வெங்காயத்திற்கு நோய்த் தாக்கம் ஏற்பட்டு அழிந்தால் அறுவடைகாலத்தில் நட்டம் ஏற்பட்டு விடுகிறது. இதனால் உரிய தவணைக்கு ஏ.பி.சிக்குக் கடனைக் கட்டமுடியாமல் போய்விடும்.

திரும்பி யாழ்ப்பாணம் வந்தபிறகு 1996 ஆம் ஆண்டு தோட்டக்காணியைத் துப்பரவு செய்யும்போது மிதிவெடி வெடித்து வலது காலை இழந்துள்ளேன். அதனால் முன்னர் செய்த மாதிரி தோட்டம் செய்ய இப்போது முடியாமலுள்ளது. ஆனால், முழு வேலையையும் நானே செய்துமுடிக்கிறேன். காலை, மாலை என வேலையைப் பிரித்து மருந்து அடிக்கிறேன். நீர் இறைக்கிறேன். ஆனால் மனம் தளராமல் என்னுடைய வேலையைச் செய்கிறேன். மனம் தளர்ந்தால் வாழ்க்கையில் எதையும் செய்ய முடியாது.

*சந்திப்பு:* ராஜ்குமார்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சாவகச்சேரி | மருதனார்மடம் | ஊர்காவற்றுறை | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றை | 50/- | 40/- | 40/- | 40/- | 40/- | 50/- | 40/- |
| உருளைக்கிழங்கு | 60/- | 60/- | 50/- | 50/- | 60/- | 60/- | 45/- |
| கத்தரிக்காய் | 50/- | 50/- | 50/- | 50/- | 50/- | 60/- | 60/- |
| பாகற்காய் | 40/- | 30/- | 40/- | 30/- | 40/- | 50/- | 35/- |
| வெண்டிக்காய் | 20/- | 15/- | 30/- | 20/- | 40/- | 30/- | 15/- |
| கரட் | 60/- | 50/- | 50/- | 40/- | 60/- | 60/- | 40/- |
| பீற்றூட் | 40/- | 30/- | 40/- | 40/- | 40/- | 45/- | 35/- |
| வெங்காயம் | 20/- | 20/- | 30/- | 20/- | 25/. | 25/- | 25/- |
| பச்சைமிளகாய் | 40/- | 40/- | 40/- | 40/- | 45/- | 50/- | 40/- |

# தொழில் வங்கி



| நிறுவனம்:- | ஜனசக்தி காப்புறுதி | அரச கருமமொழி ஆணைக்குழு | கிழக்குப் பல்கலைக்கழகம் | வட-கிழக்கு மாகாணசபை | பல்தேசியக் கம்பனி |
|---|---|---|---|---|---|
| வெற்றிடமாக உள்ள பதவிகள்:- | வலய முகாமையாளர் | தமிழ்மொழிப் போதனாசிரியர் | விடுதிக் காப்பாளர் | தகவல் தொழில்நுட்ப வியலாளர் | கிளை முகாமையாளர் (திருமலை) |
| அடிப்படைத் தகுதி:- | க.பொ.த. உயர்தரம், அங்கீகரிக்கப்பட்ட பட்டச் சான்றிதழ் | தமிழ் விசேடபாடப் பட்டதாரி | அங்கீகரிக்கப்பட்ட பட்டச் சான்றிதழ் | கணினியில் பட்டச் சான்றிதழ் | 3 - 5 வருட முகாமைத்துவ அனுபவம் |
| விண்ணப்ப முடிவு திகதி | 04-03-2003 | 05.03.2003 | 14.03.2003 | 28.02.2003 | 07-03-2003 |

தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்-
" நமது ஈழநாடு"
அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
பொழுதொரு நாடகமாம், புதுமைக்கு நாட்டியமாம்.
- தமிழ்ப்பழமொழி.

# நமது நோக்கு

## மீண்டும் 'சமாதான தேவதை'

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பேச்சுக்களைத் தொடர்ச்சியாக அவதானித்து வரும் எவருமே, நிச்சயமாக அவரைப் பற்றிக் கவலைப்படுவார், அல்லது அவரது பேச்சுக்களைச் செவிமடுக்கும் குற்றத்திற்காக தன்னைத்தானே நொந்து கொள்வார்.

அந்தளவுக்கு, தன்னை மட்டுமல்ல - கேட்பவர்களையும் 'உண்மையில் இவர் என்னதான் பேசுகிறார்...?' என சிண்டைப் பிய்த்துக்கொள்ளும் அளவுக்கு குழப்பத்தை அள்ளியிறைப்பதாகவே - அவரது பேச்சுக்கள் வெளிவருகின்றன.

மலேஷியாவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டுக்கு - கொழும்பிலிருந்து புறப்படும் வரை - சமாதான முயற்சிகளையும், அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் எழுந்தமானமாகச் சாடிய அவர் -

மலேஷியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் வெளியிட்ட கருத்துக்கள் சமாதானப் பேச்சுக்களுக்காக பாடுபடுபவராகத் தன்னை அவர் இனங்காட்டிக் கொள்ள மேற்கொண்ட அத்தனை எத்தனங்களையும் வெளிக்காட்டுவனவாக அமைந்திருக்கின்றன.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைத்தவிர அரசாங்கத்திற்கு வேறு வழியில்லை. நாடு இனி யுத்தத்திற்குச் செல்ல முடியாது. அதனால் சமாதானப் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதே ஒரே வழி என ஞானோபதேசம் பெற்றதாக அறிவித் திருக்கும் அவர்,

தான் பேச்சுக்கள் பற்றி ஆலோசனைகளை வழங்கிவருவதாகவும், பேச்சுக்களில் ஈடுபடும் அரசாங்கத் தரப்பினர் விடும் தவறுகளை திருத்தி வருவதாகவும் - கூறியுள்ளார்.

இதன் மூலமாக - உலக அரங்கில் தன்னை சமாதானத் தேவதையாக மீண்டும் உருவாக்கிக் கொள்ளும் முயற்சிகளில் அவர் நாட்டம் காட்டியிருப்பது பகிரங்கமாகிறது.

கொழும்பிலிருந்து கொண்டு - பேச்சுக்கள் என்ற பெயரில் நாட்டைத் துண்டாடுவதற்கே முயற்சிகள் நடப்பதாக - பௌத்த சிங்களப் பேரினவாதத்தைக் தட்டியெழுப்பும்,

சமாதான முயற்சிகளை எப்பாடுபட்டும் குழப்பியே தீருவதென தீவிரம் கொண்டு நிற்கும் ஜே.வி.பி.யுடன் மிக நெருங்கிய அரசியல் உறவைப் பேணத்துடிக்கும்,

ஒரு புறம் அமைதி முயற்சிகள் பெரும் பிரயத்தனத்துடன் கட்டியெழுப்பப்பட, மறுபுறம் சமாதானத்திற்கு இசைவாகாத படைத்தரப்பினரை ஊக்குவிக்க முயலும் ஜனாதிபதி சந்திரிகா -

மலேஷியாவில் சமாதான முயற்சிகளில் நம்பிக்கையும் - அதுவன்றி வேறெதுவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைத்தரமாட்டாது எனவும் கருத்து வெளியிட்டிருப்பதானது,

ஜனாதிபதியின் நன்நோக்குக் கலந்த பார்வை என்பதைவிட, இதற்குப் பின்னாலுள்ள சூட்சுமம் என்ன என்பது பற்றியே ஆராய வைக்கிறது.

இதன்மூலமாக - உலக அரங்கில் வரவேற்பைப் பெற்றிருக்கும் சமாதான முயற்சிகளில் தன்னையும் ஓர் பங்குதாரராக்கி, அந்தப் புகழில் குளிர்காயவும்,

அதேவேளை - உள்நாட்டிலும், ராஜதந்திரிகள் மட்டத்திலும் - சமாதான முயற்சிகளுக்கு எதிரானவர் என அவர் அடையாளம் காட்டப்பட்டது, சர்வதேச அரங்கை எட்டிவிடாமல் காத்துக்கொள்ளவும் - ஜனாதிபதி சந்திரிகா விரும்புவது தெளிவாகிறது.

உள்நாட்டில் மீண்டும் போருக்கான புற அழுத்தங்களை உருவாக்குபவர் எனக் குற்றஞ்சாட்டப்படும் அவர், இனப்பிரச்சினைக்கு போர் மூலம் தீர்வு கண்டுவிட முடியாது என உரத்துக் குரலெழுப்புவதும் கவனிக்க வேண்டியதாகிறது.

அதேவேளை - அப்பத்திரிகையாளர் மாநாட்டில், விடுதலைப் புலிகள் - சிறார்களைப் படைக்குச் சேர்ப்பதாகவும், பயிற்சி முகாம்களை விரிவுபடுத்தியிருப் பதாகவும் அறிவித்திருப்பதன் மூலம், புலிகளை - சமாதானத்திற்கு விரோதமானவர்கள் என தோற்றப்படுத்தவும் அவர் முயற்சித்திருக்கிறார்.

ஒட்டுமொத்தத்தில் - ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது எவ்வாறு தன்னை 'சமாதான தேவதை'யாக காட்டிக்கொள்ள முயன்றாரோ, அதேபோன்றதொரு தோற்றத்தை தற்போதும் அவர் காட்டிக்கொள்ள முயல்வதானது - அப்பட்டமான அரசியல் சுயநலத்துக்காக அவர் ஆரம்பித்துள்ள புதியதொரு நாடக அத்தியாயம் என்றே கருத இடமுண்டு.

# ரோக்கியோவில் நடைபெறும் மாநாட்டில் இதுவரையில்லாத ஜப்பானிய நிதியுதவி

## ஆனால் நிபந்தனைகளுடனேயே வழங்கப்படும்

ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் - இதுவரையில்லாதளவு மிகப்பெரிய நிதியுதவியை ஜப்பானிய அரசாங்கம் வழங்கவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை ஜப்பான் வழங்கிய உதவித்திட்டங்களிலேயே மிகப் பெரியதான இந்த உதவியில், சுமார் ஒரு பில்லியன் டொலர் வழங்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. இதே வேளை, இந்த உதவித்திட்டத்தை வழங்குவதற்கு முன்னர், அரசாங்கமும் - விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுக்களின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் உள்ள விசுவாசத்தை நிரூபிக்க வேணடும் என்று ஜப்பான் கோரவுள்ளதாகவும் தெரியவருகிறது.

முன்னதாக, ஜப்பான் எந்த நிபந்தனைகளுமின்றியே நிதியுதவியை வழங்கத் தீர்மானித்திருந்தபோதும், அண்மையில் இடம்பெற்ற சில யுத்தநிறுத்த மீறல்களையடுத்து இந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே நிதியுதவி வழங்கத் தீர்மானித் துள்ளதென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக, இலங்கையில் ஜப்பானிய அரசாங்கம் ஆறு அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக 20 பில்லியன் ரூபாவை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியத் தலைவர்களுடன் ரணில் பேச்சு நடத்துவார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று ஆரம்பிக்கவுள்ள இந்திய விஜயத்தின்போது, பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் உள்ளிட்ட பல தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் போது - வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சின்ஹா, நிதிய மைச்சர் ஜஸ்வந்த்சிங், காங்கிரஸ் கட்சித்தலைவர் சோனியா காந்தி மற்றும் முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

தற்போதைய சமாதானப் பேச்சுக்கள், அரசியல் நிலவரம், இந்தியாவுடனான உறவுகள் என்பன குறித்து பிரதமர் ரணில் விரிவான பேச்சுக்களை நடத்தவிருப்பதாகத் தெரியவருகிறது.

## நெதர்லாந்து அரசாங்கம்

# மேலும் 10 மில்லியன் யூரோக்களை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கும்

இலங்கைக்கு மேலதிகமாக 10 மில்லியன் யூரோ நாணயங்களை உதவியாக வழங்குவதற்கு நெதர்லாந்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நெதர்லாந்து அரசாங்கம் இலங்கைக்கு வருடாந்தம் 10.6 மில்லியன் யூரோக்களை வழங்கி வருகின்றது.

இதற்கு மேலதிகமாகவே 10 மில்லியன் யூரோக்கள் வழங்கப்படவுள்ளது. இந்த நிதியுதவிகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செய்யப்படும் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் எனவும் தெரியவருகின்றது.

# ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பூநகரியில் சிறுவர்கள் பாதிப்பு

பூநகரிப் பிரதேசத்தில் இருக்கும் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 40 சதவீதமானோர் ஊட்டச் சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகளிலிருந்து தெரிய வந்திருக்கிறது.

இப்பிரதேசத்தில் ஐந்து வயதுக்குட்பட்ட 3295 சிறுவர்கள் உள்ளனர். இவர்களில் 1371 பேர் ஊட்டச்சத்துக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பூநகரிப் பிரதேசத்தில் நிகழ்ந்த 750 பிறப்புக்களில் 17 குழந்தைகள் இறந்து பிறந்துள்ளன. இவ்வாறு ஊட்டச்சத்துக் குறைபாடுகள் ஏற்பட்டமைக்குக் கடந்த காலத்தில் பொருளாதாரத் தடைகள் அமுலில் இருந்ததே காரணம் எனத் தெரியவருகின்றது.

சத்துள்ள உணவு இல்லாமை, கர்ப்பிணிகள், தாய்மாருக்குப் போதிய ஊட்டச்சத்துக்கள் கிடைக்காமை என்பனவற்றாலேயே சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

# நெடுந்தீவு வைத்தியசாலைக்கு மாதம் ஒரு வைத்தியர் நியமனம்

## தடுமாறும் நோயாளிகள்

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு நீண்ட காலமாக நிரந்தர வைத்தியர் ஒருவரும் நியமிக்கப்படாமையால் நோயாளர்கள் பெரும் சிரமப்படுகின்றனர். கடந்த சில ஆண்டு காலமாக மீள்நியமனம் வழங்கப்பட்ட வைத்தியர்கள் ஆறு மாதகாலத்திற்கு ஒருவர் எனச் சுழற்சிமுறையில் நியமிக்கப்பட்டு சேவையாற்றி வந்தனர்.

இக்காலங்களில் அவசர அலுவல்கள், அலுவலகக் கூட்டங்கள் என வைத்தியர்கள் சென்றால், வைத்தியசாலையின் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்துவிடும். அவருக்குப் பதிலாக இன்னொருவர் நியமிக்கப்பட்டாலும் எவரும் இங்கு வருவதில்லை எனத் தெரியவருகிறது.

இந்நிலையில் தற்போது ஒருமாதத்துக்கு ஒரு வைத்தியர் என்ற சுழற்சிமுறை கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. இதன் காரணமாக நோயாளர்கள் தமது நோய்க்கான சிகிச்சையினைச் சீரானமுறையில் பெறமுடியாதிருப்பதுடன், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் கிளினிக் நோயாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் தமது நோய் நிலைமையினை ஒவ்வொரு வைத்தியரிடமும் தெரிவிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், புதிதாகப் பொறுப்பேற்கும் வைத்தியர் - ஒப்படைக்கும் வைத்தியரிடம் இருந்து பொருள் இருப்பு எடுத்து முடிக்க ஒருவாரகாலம் கடந்துவிடும்நிலையும் உள்ளது.

இவற்றைக் கருத்திற்கொண்டு மக்களுக்குச் சீரான வைத்திய சேவை கிடைக்கும் வகையில் நிரந்தர வைத்தியர் நியமனத்தை வழங்கவேண்டுமென நெடுந்தீவு மக்கள் கேட்டுள்ளனர். (113)

# அகாஷிக்கு எதிராக பிக்குகள் பாய்ச்சல்

(கொழும்பு)

ஜப்பானின் விசேட தூதுவரான யசுஷி அகாஷியை இலங்கைக்கான விசேட பிரதிநிதி என்ற பதவியிலிருந்து ஜப்பானிய அரசு மீளப் பெறவேண்டும் எனத் தாய்நாட்டைக் காக்கும் பிக்குமார் சங்கம் கோரியுள்ளது.

இக்கோரிக்கையை முன்வைத்து நாடுபூராகவும் பத்துலட்சம் கையொப்பங்களைத் திரட்டி ஜப்பானிய சக்கரவர்த்திக்கு அனுப்புவதற்கான ஏற்பாட்டினைத் தாய்நாட்டைக் காக்கும் பிக்குமார் சங்கம் செய்து வருகின்றது. இப்பத்துலட்சம் கையொப்பங்களில், பிக்குமார்களிடம் இருந்து மட்டும் ஒரு லட்சம் கையொப்பங்களினை மேற்படி சங்கம் திரட்டுகின்றது.

விடுதலைப்புலிகளையும், இலங்கை அரசாங்கத்தினையும் ஒரேதரத்தில் வைத்துத் தான் நோக்குவதாக யசுஷி அகாஷி தெரிவித்தமைக்கு எதிராகவே மேற்படி நடவடிக்கையில் பிக்குமார் சங்கம் இறங்கியுள்ளது. (01)

# அதாவுல்லா மீது மீண்டும் இடைக்காலத் தடை உத்தரவு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைச்சர் அதாவுல்லாவுக்கும் மேலும் ஐந்து உறுப்பினர்களுக்கும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி - இவர்கள் எந்தவொரு பதவியையும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் வகிக்கமுடியாது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் செய்த முறைப்பாட்டை விசாரணைசெய்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இந்தத் தடையுத்தரவை வழங்கியுள்ளது.

நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இந்தத் தடையுத்தரவு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும்.

# கிராம அலுவலர் பதவி உயர்வு; பாரபட்சம் குறித்து விசாரணை!

கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கான தரம் ஒன்றுக்குப் பதவி உயர்வு வழங்குவதில் ஏற்பட்ட பாரபட்சம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட இருக்கின்றன.

உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சரின் பணிப்புரைக்கமைய இதற்கென விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேன்முறையீடுகள் பிரதேச செயலாளர்கள் ஊடாக மாவட்ட அரசாங்க அதிபர் மூலம் இம்மாத முடிவுக்குள் அனுப்பவேண்டுமென அமைச்சரின் செயலாளர் விக்கிரம தெரிவித்துள்ளார்.

# வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மாணவர்களுக்கு கற்கை உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய பாடசாலைகளில் கல்விகற்கும் வறுமைக் கோட்டின்கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இந்த உபகரணங்களை வலயக் கல்வித் திணைக்களங்களிற்கு வழங்கி உள்ளது.

வறுமைக் கோட்டின்கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் விபரங்கள் - பாடசாலை அதிபர்களிடம் இருந்து ஏற்கனவே கோரப்பட்டிருந்தன. அந்தப் புள்ளிவிபரங்களின் அடிபபடையில் அந்தப் பாடசாலைகளில் அதிபர்களூடாகக் கற்கை உபகரணங்கள் விநியோகிக்கப்படுகின்றது.

மாணவர்களுக்கான புத்தகப்பை, கொப்பி, எழுதுகருவிகள் மற்றும் ஏனைய பொருட்களும் வழங்கப்பட்டுவருகின்றது. (ச)

# ஆயுதங்களைக் களைய வேண்டும்; புலிகளிடமிருந்தல்ல, ஓடுகாலிகளிடம்!

ஜப்பானில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் 5 ஆவது சுற்றுப் பேச்சு வார்த்தைக்கு முன்னர் விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைக் களையவேண்டும் என்று எதிர்க் கட்சியினரும், பேரினவாதிகளும் குரல் எழுப்பி வருகின்றனர். குரல் எழுப்புவது மட்டுமல்ல வற்புறுத்தியும் வருகின்றனர்.

ஆயுதங்கள் களையப்பட வேண டும், அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை வரை காத்திராமல் உடனடியாகவே ஆயுதங்கள் களையப்படவேண்டும். விடுதலைப்புலிகளிடம் இருந்தல்ல! விடுதலைப்புலி போராளிகளை எதிர்த்துப் போராடுவதற்காகவும், தேசத்தைக் காப்பாற்றுவதற்காகவும், தேசபக்தியுடன் முப்படைகளிலும் சேர்த்துப் பயிற்சி அளிக்கப்பட்ட - 'தேசப் பாதுகாப்புவீரர்கள்' - படைக



ளில் இருந்து ஆயுதங்களுடன் தப்பியோடித் தலைமறைவாக இருக்கிறார்களே, அவர்களிடம் இருந்து உடனடியாக ஆயுதங்களைப் பறிக்க வேண்டியதுதான் அவசியமும், அவசரமும் செய்யவேண்டிய கடமை.

விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களையவேண்டும் என்று சொல்பவர்கள் - நவீனரக ஆயுதங்களுடன் முப்படைகளில் இருந்தும் தப்பியோடி நாட்டில் நடைபெறும் கொலை, கொள்ளைகள், கற்பழிப்புகளில் ஈடுபடுவது பற்றி ஏன் கவலைப்படுவதில்லை.

இலங்கை அரசாங்கமும், இந்திய இராணுவத்தரப்பினரும் - விடுதலைப் புலிகளிடம் 2000 பேர்தான் இருந்ததாக 10 ஆண்டுகளுக்கு முன்னர் கணித்தனர். சமீபத்தில் இலங்கை இராணுவத்தரப்பினர் - விடுதலைப் புலிகளிடம் 20 ஆயிரம் பேர்வரை இருபபதாகக் கருத்துத் தெரிவித்தனர்.

ஆனால், இலங்கையின் முப்படைகளில் இருந்தும் நவீன ஆயுதங்களுடன் தப்பியோடி, நாட்டின் பல பாகங்களிலும் ஆயுதங்களுடன் தலைமறைவாக நடமாடித்திரிபவர்களின் தொகை 25 ஆயிரத்திற்கும் அதிகம். 25 ஆயிரம் பேர் முப்படைகளில் இருந்தும் தப்பியோடியதைச் சில பொறுப்புவாய்ந்த அமைச்சர்களே சில மாதங்களுக்கு முன்னர் பகிரங்கமாக வெளியிட்டனர்.

இதன்பின்னரும் வடக்கில்கூட இரண்டொரு இராணுவத்தினர் விடுதலைப்புலிகளிடமே . சரணடைந்திருக்கிறனர். முப்படைகளில் இருந்தும் இதுவரை மொத்தமாக எத்தனை பேர் தப்பியோடி இருக்கின்றனர் என்ற விபரம் வெளியிடப்படவில்லை. முப்படைகளில் இருந்தும் தப்பியோடியவர்கள் எத்தனை பேர் என்பது அரசுக்குத் தெரியாமல் இல்லை. இந்த எண்ணிக்கையை வெளியே சொன்னால் படைகளின் கட்டுக்கோப்புக் குலைந்துவிடும். அது மட்டுமல்ல புதிதாகப் படைகளுக்கு ஆட்களைத் திரட்டுவதும் சிரமமாகிவிடும்.

படைகளுக்குப் பத்தாயிரம் பேர் தேவையென்றும், பத்தாயிரம் பேரைத்திரட்டி விட்டால் மூன்றே மாதங்களில் 'பயங்கரவாதப் புலிகளை அழித்து', நாட்டைக் காப்பாற்றப் போவதாக முன்னாள் பிரதமர் இரத்னசிறி விக்கிரமநாயக்க கூறி வந்தார்.

கதிர்காமத்திலிருந்து படைகளுக்குத் தேசபக்தியுள்ள இளைஞர்களைத் திரட்டுவதற்கு விக்கிரமநாயக்க பிரதமராக இருந்தபோதே யாத்திரை போனார். அவர்தான் யாத்திரை போனாரே தவிர வேறு எவரும் படையில்சேர முன்வரவில்லை.

நவீன போர்ச்சாதனங்களும், நவீன ஆயுதங்களும் எங்களிடம் இருக்கின்றன என்று மார்தட்டிய ஜனாதிபதி சந்திரிகா - விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக போரை நான்கு மாதங்கள் நிறுத்தி வைத்த பின் நீடிப்பதில்லை என்று அறிவித்ததும், தீச்சுவாலையை எடுத்துவிட்டார். அது புலிகளைத் தாக்கமுடியாமல் அவிந்துபோனது.

புலிகளைப் பலவீனப்படுத்திப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொணடு வருவதற்காகவும் "சமாதானத்திற்காகவும்" தொடங்கிய போர் - அரச படைகள் பலவீனப்பட்ட நிலையில் சமாதானப் பேச்சுக்கு அரசைத்தளளியது.

1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் "சிங்களம் மட்டுமே" ஆட்சி மொழி என்று மொழிவெறியைக் கிளப்பி ஆட்சிக்கு வந்தவர் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க. சிங்களம் மட்டும் ஆட்சிமொழியாக்கப்படுவதை வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்த்தனர். சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்த்து வழங்கப் படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து - வடக்கிலும், கிழக்கிலும் போட்டியிட்ட தமிழ்க்காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, சுயேச்சைகளையும் - சமஷ்டி ஆட்சி அமைப்பின் மூலமே தமிழ்மக்கள், மொழி மற்றும் சம உரிமைகளைப் பெறமுடியும் என்ற கோரிக்கையை முன்வைத்த தமிழரசுக் கட்சியையும் தமிழ் மக்கள் ஆதரித்தனர். தமிழ் மக்களின் இந்த ஜனநாயகத் தீர்வை பண்டாரநாயக்க கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சயும் நிராகரித்தன. இதில் பேரினவாதிகள் வெற்றிபெற்றனர்.

"சிங்களம் மட்டும்" என்ற இனவாதக் கொள்கையைக் காந்தீய வழியல் செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக்கட்சி தொடர்ந்து எதிர்த்து வந்தது. 1957 ஆம் ஆண்டில் திருகோணமலையில் மாநாடு நடத்தி அடுத்த போராட்டம் பற்றித் தீர்மானிப்பதற்குத் தமிழரசுக்கட்சி நடவடிக்கை எடுத்தது. திருமலை மாநாட்டுக்கு வடக்கு-கிழக்கின் மூலை முடுக்குகளில் இருந்து தலைவர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் திருமலைக்குப் பாதயாத்திரை சென்றனர். தமிழரசுக்கட்சியின் மாநாட்டு ஏற்பாடுகளைப் பார்த்து அஞ்சிய பண்டாரநாயக்க-செல்வநாயகத்துடன் பேச்சு நடத்தி ஓர் ஒப்பந்தமும் செய்துகொண்டார். இந்த ஒப்பந்தத்தில் அரசின் சார்பில் பிரதமர் பண்டாரநாயக்கவும், தமிழரசுக்கட்சியின் சார்பில் செல்வநாயகமும் கைச்சாத்திட்டனர்.

. ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.ஆர் தலைமையில் கண்டியாத்திரை நடத்தி எதிர்ப்புத் தெரிவிக்க, ஆளும் கட்சிக்குள்ளேயும் எதிர்ப்புவலுக்க, புத்தபிக்குகள் மறியல் செய்ய, பண்டாரநாயக்க தாம் செய்துகொணட ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.

என்றாலும் இலங்கையின் இனப் பரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம தீர்வுகாண்பதற்கு முன்வந்த இலங்கையின் முதலாவது பிரதமர் பண்டாரநாயக்க என்று சொல்லலாம். ஒக்ஸ போர்ட்டில் இருந்து நாடு திரும்பியதும் இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி அமைப்பே பொருத்தமானது என்று கூறிய இதே பண்டாரநாயக்க, பின்னர் சமஷ்டியைப் பிரிவினை என்றும் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காக பிரசாரம் செய்தார். இதேசமயம், செல்வநாபகத்துடன் செய்துகொணட ஒப்பந்தத்தின் அதிகாரப் பரவலாக்கலுக்கு வழிவகுக்கும் பிரதேசசபைகளை நிறுவுவதற்கு முன்வந்தார்.

பண்டாரநாயக்காவின் மறைவிற்குப்பின் ஆட்சிப்பீடம் ஏறிய சிறிமா, பண்டா-செல்வா ஒப்பந்தத்தைத் திரும்பிப்பார்க்கவே மறுத்தார். தமிழரசுக் கட்சியினர் வடக்கிலும், கிழக்கிலும் காந்தீயவழியில் சத்தியாக்கிரகம் செய்து உரிமைப் போர் நடத்தியபோது, இராணுவப் பலம் கொண்டு முறியடித்தார். பேச்சுவார்த்தைக்கு வரவே மறுத்தார்.

மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி டட்லி தலைமையில் தேசிய அரசாங்கம் அமைத்தபோது - டட்லியும், செல்வநாயகமும் செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்டசபைகள் அமைத்து அதிகாரப் பரவலாக்கல்களுக்கு முயற்சி செய்தபோது, ஆளும் கட்சிக்குள்ளேயே ஜே.ஆரும், மற்றையோரும் எதிர்த்தனர். இடதுசாரித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேரா இரகசிய ஒப்பந்தத்தைப் பகிரங்கப்படுத்தி நாட்டில் எதிர்ப்பைத் தூண்டிவிட்டார். இந்த ஒப்பந்தமும் கிழித்தெறியப பட்டது.

1970 ஆம் ஆண்டில் சிறிமா தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும், ஆறு அம்சக் கோரிக்கையைத் தமிழரசுக் கட்சி தலைமையிலான தமிழர் கூட்டணி சிறிமாவிடம் முன்வைத்துப் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக அறிவித்தது. சிறிமா அம்மையார் கோரிக்கை கிடைத்ததென்று கூடப் பதில் அனுப்பத் தயங்கினார். பேச்சு நடத்த அவர் முன்வரவில்லை.

தேர்தலில் சிங்கள மக்களுக்கு வாக்குறுதியளித்தபடி இலங்கையை ஜனநாயக சோஷலிஸக் குடியரசாக்குவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அரசியல் நிர்ணயசபை அமைத்து, புதிய அரசியல் யாப்பை உருவாக்க நடவடிக்கை எடுத்தார். இதற்கென இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வாவை அரசியலமைப்பு விவகார அமைச்சராக நியமித்தார்.

புதிய அரசியல் யாப்புடன் இனப் பிரச்சினைக்குத் தீவு காணலாமென யாழ்ப்பாணக் கம்யூனிஸ்ட் தலைவரான எம்.வைத்திலிங்கம் தலைமையில் ஒருகுழு சென்று சிறிமா அம்மையாரைச் சந்தித்துப் பேசியது. இந்தக்குழு தெரிவித்த யோசனைகளை டாக்டர் கொல்வின் எதிர்த்தார்.

பின்னர் தமிழ்மக்கள் சார்பில் புதிய அரசியல் யாப்புக்கு - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிப் பிரதிநிதிகள் அரசியல் யாப்புக்கு சமர்ப்பித்த அடிப்படைப் பிரேரணைகளை டாக்டர் கொல்வின் விவாதத்துக்கு எடுகாமலே நிராகரித்தார்.

புதிய அரசியல் யாப்பு - தியாகராஜா, அருளம்பலம் ஆகிய இரு தமிழர்களின் ஒப்புதலுடன் நிறைவேறியது. இந்தப் புதிய யாப்பைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென

**கோபு**

பதைச் செல்வநாயகம் தமது காங்கேசன்துறைத் தொகுதி உறுப்பினர் பதவியை ராஜினமாச் செய்து மீண்டும் உபதேர்தலில் போட்டியிட்டு வெற்றி கொண்டதன் மூலம் நிரூபித்தார்.

இதேசமயம், தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் செயல்கள் நீடித்தன. தமிழரசுக் கட்சியினர் பல போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தினர்.

1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தது. தேர்தலைத் தொடர்ந்து நாடு முழுவதும், பொலிஸார் யாழ்ப்பாணத்தில் தொடக்கிவைத்த இனக்கலகமாக உருவெடுத்துப் பரவியது. தமிழ்மக்கள் உயிர், உடமை இழந்து அகதிகளாகத் தங்களது தாயக பூமியான வடக்கு-கிழக்குக்குக் கப்பல்களில் வந்திறங்கினர். தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை என்று ஜே.ஆர். நாடகம் நடத்தினார். இந்த நாடகத்தைத் தமிழ் இளைஞர்கள் வெறுத்தனர்.

தமிழ் இளைஞர்கள் வடக்கில் பொலிஸ்காரர் சிலரைச் சுட்டுக்கொன றனர். 1979 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் "பயங்கரவாதிகளை"தேடி அழிப்பதற்காகப் பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்காவுக்குச் சகல அதிகாரங்களையும் கொடுத்து யாழ்ப்பாணத்துககு அனுப்பி வைத்தார். யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்கள் சிலர் கொல்லப்பட்டனர். பலர் கைது செய்யப் பட்டனர்.

இளைஞர்கள் ஆயுதக்குழுக்களை அமைத்துப் போராட முற்பட்டனர். இந்தியாவிலிருந்தும் இதற்கு ஆதரவு கிடைத்தது.

(தொடரும்...)

---

## எங்கே போகிறோம்...?

நேசன்

# குழந்தைகளின் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு

எப்படியாவது பிள்ளைகளைப் படிக்க வைத்து ஆளாக்கி விடவேண்டும் என்பது எல்லாத் தாய் தந்தையர் மனங்களிலும் இருக்கின்ற ஆசை. நியாயமான ஆசை. தனது பிள்ளை படித்து உயர்ந்து ஒரு பெரியவனாக ஆக வேண்டுமென ஒரு தந்தையோ, தாயோ விரும்பவில்லை என்றால் - அதுதான் ஆச்சரியம் - கவலை. உரிமையோடு ஆசைப்படத் தெரிந்த பல பெற்றோர்களுக்குத் தாம் விரும்புகிறநிலைக்குப் பிள்ளையைக் கொண்டு செல்வதற்கான வழிமுறையோ அணுகுமுறையோ தெரியாமல் இருக்கிறது.

துள்ளித் திரிகின்ற வயதில் துடுக்கடக்கிப் பள்ளிக்கு அனுப்பி வைப்பதோடு பிள்ளையின் படிப்பில் தனக்கிருக்கிற பங்கு முடிவடிந்து விட்டதாய் ஒரு தாயோ, தந்தையோ - (குறிப்பாக வசதி வாய்ப்புக்கள் இல்லாத, பொருளாதாரத்தில் பின்னடைந்தநிலையிலுள்ளவர்கள்) கருதிவிடுகிறார்கள். நல்ல நிலையில் உள்ளவர்களும், மத்தியதரத்தினரும் பிள்ளைகளை 'நல்ல' பாடசாலைகளில் சேர்த்து, கேட்பதெல்லாம் எப்படியாவது வாங்கித் தந்து, 'ரியு,ஷனுக்கும்' ஒழுங்கு செய்து வருவதோடு, பிள்ளைகளின் படிப்புத் தொடர்பாகத் தமக்கிருக்கும் கடமைகள் முடிவடைந்து விட்டதாய்க் கருதிவிடுகிறார்கள் - இது சரிதானா?

பாடசாலைக்குப் போன என்னுடைய பிள்ளை படிப்பில் எந்தநிலையில் இருக்கிறான்?

அவனது மற்ற நடவடிக்கைகள் பாடசாலையில் எப்படி இருக்கின்றன?

அவனது அடைவுகள் திருப்திகரமாக உள்ளனவா? அவனது முன்னேற்றம் தொடர்பாகப் பெற்றோர் என்றமுறையில் ஏதும் பங்களிப்புக்கள் செய்ய வேண்டுமா? என்பன பற்றியெல்லாம் எத்தனை பேர் அக்கறை கொள்கிறோம்? எத்தனைபேர் சிந்திக்கிறோம்? உணவு, உடை, உடல்நலம் என்பனபோல் இன்று கல்வியும் ஒரு மனிதனின் அடிப்படைத் தேவையாக மாறி இருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். கல்வி அறிவைத் தேடிக்கொள்ள இயலாத ஒருவன் தனது வாழ்வில் பல படிகள் பின்தங்கிப்போக நேரிடுகிறது என்பதையும் நாம் அறிவோம். இத்தகைய தெளிவுகளின் அடிப்படையில் நாம் - நமது பிள்ளைகளின் வாழ்க்கைக்கான தளங்களை நிறுவும்போது மிகவும் விழிப்பும், தொடர்ந்த அக்கறையும் உடையவர்களாய் இருக்கவேண்டும்.

எமது குடும்பக் கடமைகளில் குழந்தைகளின் கல்வியின் மீதான எமது அக்கறை ஒரு பிரதான இடத்தை வகிக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஒரு படிப்பாளியாய், ஒரு பெரிய மனிதனாய் வருவதற்கான ஏற்பாட்டிற்கு முன்னர் - அவன் ஒரு முழுமையான மனிதனாய் வருவதில் நாம் ஆற்ற வேண்டிய பங்கை நாம் உணர்ந்து செயற்படக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சீரான ஒரு குடிமகனாக எமது பிள்ளை உருவாவதற்குத் தேவையான அடிப்படைகளைத் தேடித்தர நாம் தயாராகவேண்டும்.

சாதாரணமாக ஒரு மனிதனின் உருவாக்கத்திற்குச் சவாலாக அமைந்துவிடக் கூடிய சூழலின் தாக்கத்தில் இருந்து எமது பிள்ளைகளைக் காப்பாற்ற நாம் தயாராக வேண்டும்.

நாளாந்தம் எமது பிள்ளைகளுடன் நாம் செலவிடும் நேரத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்களுடன் அன்பாகப்பேசி, அவர்களின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து - நமக்குப் பின் பலமாக எமது அம்மா, அப்பா இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை அவர்கள் மனதில் ஊன்றச் செய்யவேண்டும்.

நமது பிள்ளைகளின் பாடசாலைகளுக்குச் சென்று அவர்களன்நிலை பற்றி அறிய நாம் நேரம ஒதுக்கவேண்டும். (இன்றைய கல்வி முறையில் அதற்கான ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்).

பிள்ளைகளின் கல்வி தொடர்பாக அழைக்கப்படும்போது அக்கறையுடன் நேரில்சென்று ஆசிரியர்கள், அதிபர்களுடன் கலந்துரையாடி நமக்குரிய கடமை எதுவென அறிந்து கொள்ளவேண்டும்.

- இன்று பரவலாக எல்லாப் பாடசாலைகளிலும் மேற்சொன்ன நடமுறைகள் அமுலில் இருக்கின்றபோதும் - இவை தொடர்பான அக்கறை எவ்வளவு தூரம உள்ளது என்று பார்த்தால் - நிலைமை கவலைக்கிடமாகத்தான் உள்ளது.

பாடசாலை அபிவிருத்திச்சபையின் கூட்டத்திற்கு அழைக்கப்படும்போது பெரும்பாலான பெற்றோர் சமுகமளிப்பதேயில்லை - பிள்ளைகளின் அடைவுகள் பற்றிக் கலந்துரையாட அழைக்கப்படும்போதுகூட அக்கறையுடன் வருகின்ற பெற்றோரின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கின்றது.

எமது சொந்தப் பிள்ளைகளின் விஷயத்தில் அக்கறை எடுத்து அவர்களின் நலன் பற்றிய கவனிப்பின் ஒரு பகுதியாக எமது பிரசன்னத்தை வழங்கக் கூட நாம் தயாராகவில்லையென்றால் அதன் பொருள் என்ன? பெற்ற பிள்ளையின் ஆக்கம் தொடர்பாகவே நாம் பாராமுகமாக இருக்கிறோம் என்றால் பின்பு - கடைசி அடைவுகள், பெறுபேறுகள் பற்றி அக்கறை எடுக்க நமக்கென்ன உரிமையிருக்கிறது?

அவனுக்குப் படிப்பு ஏறவில்லையென்று பாமரத்தனமாகச் சொல்லிவிட்டு ஒதுக்கிவிடுவது யாருக்கு நன்மை தரப்போகிறது? ஒட்டுமொத்தமான கவனிப்பும் அக்கறையும் எம்மிடம் இல்லாதபோது - பலன்களைப்பற்றி நாம் எப்படி கவலைப் பட முடியும்?

கற்பதற்கான அடிப்படை வசதிகளை மட்டும் ஏற்படுத்திக் கொடுப்பது போதுமானதா?

பெற்றோர் என்கிறவகையில் எமது அக்கறை - அவர்களது முன்னேற்றம் பற்றிய எமது அறிவு என்பன முக்கியமில்லையா?

இன்றெல்லாம் பாடசாலைகளிலாகட்டும், கல்வி நிறுவனங்களிலாகட்டும் மாணவர்களினது நலனின் பொருட்டு ஒரு பெற்றோர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டால் அதற்கென வருகைதரும் பெற்றோரினது எண்ணிக்கை பெரிதும் திருப்தி தருவதில்லை.

- பிள்ளை படிக்கவேண்டுமென்று விரும்புகின்றோம். பிள்ளை பின்னடைந்தால் அவன் படிப்பில் குறைந்துபோனான் என்று அங்கலாய்கிறோம். பெற்றோர் என்ற அடிப்படையில் ஏன் எமது பிள்ளைகள் பின்னடைந்துள்ளனர் என்பதை அறிந்து ஒரு தடங்கல் இருக்கும் பட்சத்தில் அதை நீக்க நமது உதவியை வழங்க வேண்டியது நம்கடமையில்லையா? வெறும் கனவு காண்கிற விடயமா ஒரு பிள்ளையின் முன்னேற்றம்? - நடைமுறையோடு இயைபுபடுத்தி அறிவுபூர்வமாகத் தொழிற்படுவது பெற்றோரது கடமையில்லையா?

❖❖❖❖❖

மீண்டும் சந்திப்போம்...




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## சோபிக்கமாட்டாது

இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறுகின்றன. இவ்விரண்டு ஆட்டங்களுமே உலகின் பலம்வாய்ந்த அணிகளுடன் தற்போது உள்வாங்கப்பட்டு திறமைகளை வெளிக்காட்ட விரும்பும் பின்வரிசை அணிகள் மோதவிருக்கும் ஆட்டங்களாகும். அதாவது அவுஸ்திரேலியா நமீபியாவுடன் **Noth - West Stadium, Potchefstroom** மைதானத்திலும், தென்னாபிரிக்கா - கனடாவுடன் **Baffalo Park, East London** மைதானத்திலும் சந்திக்கவிருக்கும் ஆட்டங்களாகும்.

இங்கே ஒன்றைமட்டும் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். இப்போட்டிகளில் அவுஸ்திரேலியாவும், தென்னாபிரிக்காவும் வெற்றிகொள்ளும் என்பதே அது. உலகின் தரம் வாய்ந்த பந்துவீச்சாளர்கள், களத்தடுப்பாளர்கள் மற்றும் துடுப்பாட்ட வீரர் கள் மத்தியிலே பின்வ ரிசை அணிகள் திணறப் போவது நிச்சயம்.

### இன்றைய ஆட்டங்கள்

தென்னாபிரிக்கா அணிக்கு **Supper Six** இற்குள் நுழைவதற்கு ஓரளவாவது வாய்ப்பு உள்ளது என்பதை நிரூபிக்க, இன்றைய ஆட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமையவிருக்கின்றது. அவுஸ்திரே லிய அணியோ பெரும்பாலும் **Supper Six** இன் நுழை வாயில் வரை சென்றுவிட்டது என்றே கூறவேண்டும். இந்த நுழைவாயிலிலிருந்து இலகுவாக உள்ளே செல்ல நமீபியா இன்றைய ஆட்டத்தில் ஒத்துழைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 23 ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் மோதிய கனடா அணி, தோல்வியைத் தழுவிக்கொண்டாலும்கூட, இதுவரை நிகழ்ந்த உலகக் கிண்ணப் போட்டிகள் கனடா அணியின் துடுப்பாட்ட வீரர் டேவிசன் நிகழ்த்திய அந்தச் சாதனை யாராலும் மறக்கக்கூடிய ஒன்றல்ல. அதாவது, வெறும் 67 பந்துகளைச் சந்தித்து 100 ரன்களைக் குவித்த அந்த அதிரடி நாயகன், இனிவரும் காலங்களில் நல்ல ஒரு இடத்தைப் பிடிப்பார் என்பது மட்டும் நிச்சயம்.

அத்துடன், நீண்டகால அனுபவங்களைக் கொண்ட பங்களாதேஷ் அணி, கனடாவிடம் துவண்டுபோனதும், கனடா வீரர்களில் உள்ள சகலதுறை அம்சங்களும் கனடாவின் எதிர்கால எழுச்சியை இப்பொழுதே படம் பிடித்துக் காட்டுகிறது. டேவிசனைப் போல், அவருக்குப் பின்னால் வந்த துடுப்பாட்ட வீரர்களும் செய்திருப்பார்களேயானால், இரண்டு தடவை உலகக் கிண்ணத்தை தன்னகப்படுத்திய மேற்கிந்தியத்தீவுகள் அணி அன்றைய தினம் மண்கெளவி இருக் கும் என்பது உண்மை. இதேபோல், நமீபிய அணியின் விளையாட்டிலும் ஒருவித வளர்ச்சியை நாம் காணக் கூடியதாய் இருக்கிறது. துடுப்பாட்டத்தில் ஒருவித எழுச்சியை அவர்களிடம் இருந்து காணக்கூடியதாய் உள்ளது.

எவ்வாறாயினும், இன்றைய ஆட்டத்தினால் இவ்விரு அணிகளும் மனோ ரீதியாக சலிப்பு அடையாமல் எதிர்காலத்தின் விடிவு நோக்கி நடைபயில்வதே சாலப் பொருத்தமாகும்...

வி. ஏ. கோவி

### நேற்றைய பங்களாதேஷ் - நியூசிலாந்து ஆட்டத்திலிருந்து...




இலகுவான வெற்றியைப் பெற்ற நியூசிலாந்து



50 அடித்த அஷ்ரபுல்



ஓரம் வீச்சில் சிதறும் விக்கெட்

## தெய்வமே! தெய்வமே!!

உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்ளும் பதினான்கு அணிகளிலும் கூடுதலான சமயபக்தி கொண்ட அணியாக இலங்கையைக் குறிப்பிடலாம் என்கிறார் ஒரு கிரிக்கெட் விமர்சகர். தமது பந்து வீச்சினை ஆரம்பிக்குமுன் சமிந்தவாஸ், தில்ஹாரா பெர்ணான்டோ இருவரும் சிலுவை அடையாளம் (ஸ்பிரித்து சாந்து) இட்டதன் பின்பே ஆட்டத்தை ஆரம்பிக்கிறார்கள் என்கிறார் அவர்.



ஜெயசூரிய - தெய்வமே துணை

கிரிக்கெட் ரசிகர்கள் கூடுதலாக சமிந்தவாஸிடம் இதனை அவதானித்திருப்பார்கள். சனத் ஜயசூரிய, வான் வெளியை அண்ணாந்து பார்த்து இறைவனுக்கு வணக்கம் செலுத்துவதையும்காணலாம். தென்னாபிரிக்கா சுற்றுப் பயணத்துக்கு முன்பதாக பெல்லன் விலபௌத்த ஆலயம், கதிர்காமம், தனது சொந்த ஊரான மாத்தறைக்கு அருகில் உள்ள வாப்பிக்காறாமய பன்சாலைக்குச் சென்று இறை ஆசி வேண்டியிருக்கிறார் சனத். இதேவேளை, ஸ்ரீபன் பிளெமிங், அல்லது அன்ரூ சைமன்ட்ஸ் தமது அற்புதமான சதங்களின் பின் இறைவணக்கம் செய்தமைக்கான குறியீடுகள் எதையும் செய்ததாகத் தெரியவில்லை என்றும் கூறுகிறார்.



வாஸ் - இறைவனை நம்பி

இன்னொருபுறம் - பாகிஸ்தான் அணி வீரர்களிடம் இறைநாட்டம் கொண்ட செயற்பாடுகளை அவதானிக்க முடியும். அதோடு யூசுப் யொகானா தனது அரைச்சதம் போட்டபின் சிலுவைக்குறி போட்டுக்கொண்டதையும் ரசிகர்கள் அவதானித்திருப்பார்கள்.

இதேவேளை, இந்திய அணி வீரர்கள் மத நம்பிக்கையில் குறைந்தவர்கள் என்று கூற முடியாது. ஆனால், அவர்களின் செயற்பாடுகள் பல கிரிக்கெட் விமர்சகர்களை மிகுந்த எரிச்சலுக்குட்படுத்தியிருக்கிறது என்பதை அவதானிக்க முடிகிறது. சிம்பாப்வே அணியுடனான ஆட்டத்தின்போது கங்கூலியின் நடத்தைகள், யுவ்ராஜ்சிங்கின் செயற்கைக் களத் துடுப்புப் பாணிகள், ஹர்பஜனின் **Body Languages** மற்றும் அனேகமாக எல்லோரும் அணிந்திருக்கும் **Sun glasses** எல்லாம் இவர்களை கிரிக்கெட் வீரர்கள் என்ற நிலையில் இருந்து இந்திய **bolly wood** சினிமா நடிகர்களாகக் காட்டுகிறது என்கிறார்.

1983 இல் இவர்கள் உலகக் கோப்பையை வென்றார்கள். கால ஓட்டம் இவர்களை நவநாகரிக (அநாகரிக) கலைத்துவம் நிறைந்த "சினிமாக்காரர்களாக" மாற்றிவிட்டது என்று குறைப்படுகிறார் விமர்சகர். இந்தியக் கிரிக்கெட் இந்தியச் சினிமாவாக மாறிவிட்டதா? ஒரு விக்கெட் வீழ்த்தும்போது, ஒரு பிடியை பிடிக்கும்போது மகிழ்ச்சி ஆரவாரம் ஒன்று உண்டு. ஆனால், அது சினிமாப் பாணியில் இருப்பதே அசிங்கம் என்கிறார் அந்த விமர்சகர். **Good for nothing.**

ஜோசப் கிருஷ்ணா

## நாளும் ஒரு வினா

**1999 வரையான உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் யார்?**

**வசீம் அக்ரம் (32 விக்கெட்டுக்கள்)**

## இனியாவது சனி விலகட்டும்

2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் - அவுஸ்திரேலியாவையும் தோற்கடித்து, தென்னாபிரிக்கா வெற்றிக் கிண்ணம் பெறும் என்றிருந்த நம்பிக்கை தவிடுபொடியாகும்போலத் தெரிகின்றது. இதற்குக் காரணம் எதிர்பாராத வகையில் - நியூசிலாந்தின் அற்புத ஆட்டத்தால் தென்னாபிரிக்க அணி மண்கவ்வியதாகும். நியூசிலாந்துடனான தோல்வி, சுற்றுப் போட்டியில் தென்னாபிரிக்காவின் இரண்டாவது தோல்வியாகும். தென்னாபிரிக்கப் பத்திரிகைகளும் சுருதி குறைந்த தொனியிலேயே வெற்றி வாய்ப்புப் பற்றிய செய்திகளை வெளியிடுகின்றன.



கிப்ஸ் - தலைவராக ஆசை

கடந்த உலகக்கிண்ணச் சுற்றுப் போட்டி வரலாற்றில - இரண்டு தடவை அரை இறுதிப் போட்டியிலும், ஒரு தடவை கால் இறுதிப் போட்டியிலும் சுற்றுப் போட்டியில் இருந்தும் வெளியேறியவர்கள். அந்த ஏமாற்றங்கள் தென்னாபிரிக்க அணியை ஒரு நிழல் போலத் தொடர்ந்து வருகின்றது போலத் தெரிகின்றது. முக்கியமான சுற்றுப் போட்டிகளில் இறுதிவரை வரும் நாம், இறுதி நிமிடத்தில் வெற்றியை நழுவவிட்டு விடுகிறோமே என்று கவலைப்படுகின்றார் ஷோன் பொல்லொக்.

அடுத்த சுற்றுக்கு எப்படியாவது நாம் நுழைந்தே தீருவோம். எனது அணி வீரர்கள் அதற்கு உறுதிபூண்டுள்ளார்கள். எனவே, நிலைமைகளை மாற்றியமைக்க எங்களால் முடியும் என்றே நம்புகின்றேன் - என்கிறார். ஆனாலும், 30,000 ரசிகர்கள் முன்னணியில் தாயக மண்ணில் கண்ட தோல்வி ஒரு வடுவாக தென்னாபிரிக்க அணியிடம் இருக்கும்போல் தெரிகின்றது.

அணியின் பயிற்றுநர் எரிக் சிமன்ஸ் நம்பிக்கையுடன் கூறுகின்றார், பொல்லொக் எதிலிருந்தும் மீண்டு வரக்கூடியவர். அவர் மிகுந்த தகுதியுடையதோர் வீரர். எதையும் சாதித்துக் காட்டும் ஆர்வம் உள்ளவர் அவர் - என்கிறார் தொடர்ந்து.

மேற்கிந்திய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான போட்டியில் துரதிர்ஷ்ட மழை மேற்கிந்தியாவுக்கு இரண்டு புள்ளிகளைக் குறைத்தது, தென்னாபிரிக்காவுக்கு ஒரு நம்பிக்கைக் கீற்றொன்றைக் கொடுத்திருக்கிறது. அதேவேளை, அலன் டொனால்டின் தொடர்ந்து பங்கு பற்றல், அவரின் **FORM** பொறுத்து சந்தேகமாக இருக்கின்றது. இன்னொருபுறம் ஹேர்ஷல் கிப்ஸ், அலன்டொணல்ட் ஆகியோர் தம் அணித்தலைவர் பற்றித் தெரிவித்த கருத்துக்கள் அணிக்குள் சிறிது புகைச்சலைக் கிளப்பியிருக்கின்றன. இந்நிலையில், கனடாவுடனான ஆட்டம், இலங்கையுடனான ஆட்டம் என்று இரண்டு கட்டங்கள் - அதில் ஒன்று கண்டம். என்ன செய்யப்போகிறார்கள்?

தென்னாபிரிக்காவைத் துரதிர்ஷ்டம் இன்னமும் விட்டுவிடவில்லை போலத்தெரிகிறது. இம்முறை தென்னாபிரிக்கா கிண்ணம் வெல்லுமாயின், அது தென்னாபிரிக்காவைப் பின் தொடரும் துரதிர்ஷ்டத்தைத் தொலைக்கும் முதல் நிகழ்வாக இருக்கும்.

நிர்மலன்.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### பங்களாதேஷ் எதிர் நியூசிலாந்து அணி

**பங்களாதேஷ் அணி**

| | | |
|---|---|---|
| கனான் சர்க்கார் | C மக்கலம் b பொண்ட் | 09 |
| அஷ்ரபுல் | C&b பொண்ட் | 56 |
| ஹொசைன் | b ஓரம் | 05 |
| பாஷார் | C மக்கலம் b ஓரம் | 00 |
| கப்பாலி | C பொண்ட் b அடம்ஸ் | 09 |
| அக்ரம் கான் | C பிளெமிங் b பொண்ட் | 13 |
| காலித் மசூட் | not out | 35 |
| காலித் மக்மூத் | C மக்கலம் b ஓரம் | 12 |
| முகம்மட் றபீக் | not out | 41 |
| உதிரிகள் | | 18 |
| 7 விக்கெட்டுக்களை இழந்து (50 ஓவர்கள்) | | 198 |

**பந்து வீச்சு - நியூசிலாந்து அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பொண்ட் | 10 | 1 | 33 | 3 |
| மில்ஸ் | 06 | 0 | 32 | 0 |
| அடம்ஸ் | 10 | 0 | 50 | 1 |
| க்ராம் | 10 | 1 | 32 | 3 |
| கெய்ன்ஸ் | 03 | 0 | 17 | 0 |
| வெட்டோரி | 10 | 0 | 19 | 0 |
| ஸ்டைரிஸ் | 01 | 0 | 10 | 0 |

**நியூசிலாந்து அணி**

| | | |
|---|---|---|
| மக்மிலன் | b மக்மூத் | 75 |
| பிளெமிங் | C&b மக்மூத் | 32 |
| அடம்ஸ் | C முகமட் b மக்மூத் | 18 |
| ஸ்டைரிஸ் | not out | 37 |
| கெய்ன்ஸ் | not out | 33 |
| உதிரிகள் | | 04 |
| 3 விக்கெட்டுக்களை இழந்து (33.3 ஓவர்கள்) | | 199 |

**பந்து வீச்சு - பங்களாதேஷ் அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| இஸ்லாம் | 7 | 1 | 37 | 0 |
| பைஸ்யா | 8 | 0 | 56 | 0 |
| மக்மூத் | 10 | 0 | 46 | 3 |
| கப்பாலி | 6 | 0 | 38 | 0 |
| சன்வார் | 2 | 0 | 19 | 0 |
| முகம்மட் அஸ்ரபுல் | .3 | 0 | 03 | 0 |

நியூசிலாந்து அணி, பங்களாதேஷ் அணியை 7 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது. இதன்மூலம் மேலும் நான்கு புள்ளிகளை நியூசிலாந்து பெற்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரச வேலைவாய்ப்பையே எதிர்பார்க்கும் பட்டதாரிகள்

## அண்மைய ஆய்வின் முடிவு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பாக அண்மையில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபர ஆய்விலிருந்து, 69 சதவீதமான பட்டதாரிகள் அரச வேலை வாய்ப்பையே எதிர்பார்த்திருக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது. 6.2 சதவீதமானவர்கள் மட்டுமே தனியார் தொழிலை எதிர்பார்ப்பதாக வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள செயலணிக்குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வின் மூலம் - நாட்டில் 25,882 வேலையற்ற பட்டதாரிகள் உள்ளதாகவும் இதில் 62 சதவீதமானோர் கலைப் பட்டதாரிகள், 23 சதவீதமானோர் விஞ்ஞானப் பட்டதாரிகள், 8 சதவீதமானோர் பொருளியல் பட்டதாரிகள் எனவும் தெரியவந்துள்ளது. இவர்களது வயதைப் பொறுத்தவரையில் 25-29 வயதுக்கு இடைப்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் 35 சதவீதமாகும். 32-35 வயதுக்கிடைப்பட்டவர்கள் 35 சதவீதமாகும்.

இவர்களில் 31 சதவீதமானோர் தமக்கு கம்பியூட்டர் கல்வி தேவை என்றும், 22 சதவீதமானோர் ஆங்கில அறிவு தமக்கு போதுமானதாக இல்லை என்றும், 13 சதவீதமானோர் தமக்கு நிர்வாகத்துறை பயிற்சி தேவை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003**
**இன்றைய ஆட்டம்**

தென்னாபிரிக்கா Vs கனடா - BUFFALO PARK EAST LONDON - 2 pm
அவுஸ்திரேலியா Vs நமீபியா NORTHWEST STADIUM POTCHEFSTROOM 2 pm

## மின்சாரசபை ஊழியர் போல் நடித்து வயோதிபப் பெண்ணிடம் கொள்ளை

மீசாலையில் தனியாக இருந்த வயோதிபப் பெண்ணிடம் மின்சாரசபை ஊழியர்கள் போல் நடித்த இரு நபர்கள், அப்பெண்ணிடமிருந்து காதணிகள், பணம் என்பனவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது - நேற்றுக்காலை 10 மணியளவில் மீசாலை கிழக்குப் பகுதியில் வீடொன்றில் தனியாக இருந்த 70 வயதான வயோதிபப் பெண்ணிடம் சென்ற இருவர், தாம் மின்சார சபை ஊழியர்கள், மீற்றர் பார்க்க வேண்டும் என்று கூறி வீட்டினுள் நுழைந்துள்ளனர்.

இவர்கள், அப்பெண்ணின் வாயை பிளாஸ்ரரால் ஒட்டிய பின், அவரது காதணிகளை அறுத்தெடுத்தனர். இதனால், அவரின் காது துண்டிக்கப்பட்டது. பின்னர், அலுமாரியையும் திறந்து ஒரு தொகைப் பணத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் தப்பியோடிவிட்டனர்.

காதில காயமடைந்த இந்த வயோதிப் பெண் தற்போது, யாழ். ஆஸ்பத்திரியில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (25)

## மாதகலில் மோதுண்ட படகை இழுத்துச்சென்ற படையினர்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பரப்பில் கடற்படையினரால் சேதமாக்கப்பட்ட மீன்பிடிப் படகை கடற்படையினர் இழுத்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இச்சம்பவத்தின்போது, மீனவர்களின் படகொன்று சேதத்துக்குள்ளாகியது. அதிலிருந்த மீனவர்கள் இருவர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

சேதமடைந்த படகையும், அதன இயந்திரத்தையும் கடற்படையினர் தம்முடன் இழுத்துச் சென்றுவிட்டனர். இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை காங்கேசன்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முஸ்லிம்கள் பேச்சில் தனித்தரப்பு; இந்தியாவிலிருந்து வந்ததும் ஆராய்வு

### ஹக்கீமிடம் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வழிவகைகள் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, முஸ்லிம் தரப்பு எம்.பிக்கள் இந்தக் கோரிக்கையை பிரதமரைச் சந்தித்து முன்வைப்பதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் நேற்றைய தினம் ஹக்கீம் மட்டுமே பிரதமரைச் சந்தித்ததாகத் தெரிய வருகிறது.

ஹக்கீமின் கோரிக்கைகள் குறித்து, தாம் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பிய பின்னர் பேசுவதாக ரணில் தெரிவித்தார்.

## அதாவுல்லா தலைமையில் அஷ்ரப் காங்கிரஸ் கட்சி

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுக்குழுவான அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான அணி, 'அஷ்ரப காங்கிரஸ்'' என்ற புதிய கட்சியை ஆரம்பித்துள்ளது.

அமைச்சர் அதாவுல்லாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

தற்போது கட்சிக்கான புதிய யாப்பும், கொள்கைத் திட்டங்களும் வகுக்கப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது.

தற்போதைக்கு தலைவராக எஸ். சுபைர்தீன், பொதுச்செயலாளராக ஹப்ரத் மற்றும் தவிசாளராக அமைச்சர் அதாவுல்லாவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பத்திரிகையாளர் மாநாட்டில் புதிய கட்சி பற்றிய அறிவிப்பு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என தெரிவித்த கட்சி வட்டாரங்கள், தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து புதிய கட்சிக்கான அங்கீகாரத்தை பெறவுள்ளதாகவும் கூறியுள்ளன.

### ஆர்மிரேஜ் - அகாஷி வொஷிங்ரனில் சந்தித்துப் பேச்சு

இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் குறித்து, வொஷிங்ரனில் அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ்ஜுக்கும், ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷிக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றன.

அண்மைக்கால யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் குறித்து இருவரும் ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இந்தியா நிதியுதவ

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு உதவுமுகமாக இந்தியா 250 மில்லியன் டொலர் உதவியை வழங்குவதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

### நகரிலும் டெங்கு நோயாளிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைப் பகுதியில 4 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். காய்ச்சல் காரணமாக, யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்களுக்கு இரத்தப் பரிசோதனையின் பின் டெங்கு காய்ச்சல் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### புலிகளின்..

குழுவின் புதிய தலைவர் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்யவுள்ளார். அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வந்ததும் அங்கு சென்று அவரைச் சந்திப்பதுடன், தலைவர் பிரபாகரனுடனும் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக அவர் கலந்துரையாடவுள்ளார்.

### யுத்தம் மூலம்..

நாம் பேச்சுக்களில் ஈடுபாடு காட்டி வருகிறோம்.

தற்போதைய பேச்சுக்களில் முன்னேற்றமும் பின்னடைவும் இருக்கவே செய்கின்றன. ஆனாலும், இந்த வழியில் முன் செல்லவே முயற்சிக்கிறோம்.

எமது கட்சிக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிற அரசியற் காரணிகள் கூட - யுத்தத்தாலும், இராணுவ ரீதியாகவும் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதை ஏற்றுக் கொண்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது.

பேச்சுக்களில் உள்ள ஆபத்துக்கள் குறித்து பிரதமரிடம் ஆலோசனை வழங்கி வருகிறேன். சில சமயங்களில் அவர்கள் தரப்பிலுள்ள தவறுகளைத் திருத்தி வருகிறேன். பேச்சுக்கள் தொடர வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பல்கலைக்....

இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் - பல்கலைக்கழக நுழைவாயிலில் நிர்வாகத்தின் நடவடிக்கைகளை சித்திரிக்கும் சுலோகங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

கடமைக்குச் செல்லாது ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதினால், நிர்வாகத்தின் சில கிளைகளும், விரிவுரைகளும் நடைபெறவில்லை. ஊழியர்கள் பல்கலைக்கழக நுழைவாயிலில், அலுவலகத்தின் முன் பகுதிகளில் அமர்ந்திருந்தனர்.

விரிவுரைகள் நடைபெறாமையால் மாணவர்கள் பல்கலைக் கழக வளாகத்தில் கூடிநின்றமையைக் காணக்கூடியதாக இருந்தது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக ஊழியர் சங்கத்தின் தலைவர் சி.கலாராஜ் தெரிவித்தார்.

## வாகனங்களை ஒப்படைக்க எம்மிடம் கோரப்படவில்லை

### முன்னாள் பிரதேசசபைத் தலைவர் தெரிவிப்பு

பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட வாகனங்களை திருப்பி ஒப்படைக்குமாறு 'நான்' எந்தவிதமான, தெளிவான அறிவுறுத்தல்களும் எமக்கு அனுப்பிவைக்கவில்லை என முன்னாள் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவரும் புளொட் அமைபபைச் சேர்ந்தவருமான அன்ரன் பொன்னையா தெரிவித்துள்ளார்.

வாகனங்களை ஒப்படைக்கும்படி கோரப்பட்டுள்ளதாக பத்திரிகைகளிலேயே தகவல்கள் வெளியாகின. ஆனால், எமக்கு இத்தகைய தெளிவான அறிவுறுத்தல்கள் எதுவும் கிடைக்கவில்லை. யாரிடம் வாகனங்களை ஒப்படைப்பது என்ற தெளிவான அறிவுறுத்தல் கிடைத்தால் நாம் வாகனங்களை ஒப்படைக்கத் தயார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மரபணுப் பரிசோதனை தாமதம்; செம்மணி விசாரணை ஒத்திவைப்பு

செம்மணிப் புதைகுழி வழக்கு விசாரணைகள் மே 20 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டன. கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன் தினம் இவ்வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான மரபணுப் பரிசோதனை அறிக்கை அலகாபாத் மருத்துவப் பரிசோதனை நிலையத்திலிருந்து கிடைக்காததால் விசாரணைகள் மே 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இந்த வழக்கில் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த கப்டன் லலித் குமார, கப்டன் திவ்ஷான் பெரேரா, லெப். விஜயவிக்கிரம, லெப். அத்துல உதயகுமார உள்ளிட்ட ஐந்து படையினரும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். இவர்களுக்கு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**உலகக்கோப்பை கிரிக்கெட் - 2003**

## இங்கிலாந்துக்கு எதிராக இந்தியா அபார வெற்றி!

(டேர்பன்)

உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் நேற்று டேர்பனில் நடைபெற்ற இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான ஆட்டத்தில், இந்திய அணி 82 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில், துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. ராகுல் ட்ராவிட் 62 ஓட்டங்களையும், சச்சின் டெண்டுல்கர் 50 ஓட்டங்களையும், யுவராஜ்சிங் 42 ஓட்டங்களையும் பெற்றனர்: இங்கிலாந்து அணியின் சார்பில் கெடிக் மூன்று விக்கெட்டுக்களையும், பிளிண்டோவ் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, இந்திய அணியின் அபார பந்து வீச்சிற்கும், சிறந்த களத் தடுப்புக்கும் ஈடுகொடுக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது.

இறுதியாக, 45.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து அணி சார்பில் பிளிண்டோவ் 64 ஓட்டங்களையும், வகன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். இந்திய அணியின் ஆஷீஸ் நெஹ்ரா 6 விக்கெட்டுக்களையும், ஷாஹீர் கான் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர். ஆஷீஸ் நெஹ்ரா ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றி மூலமாக Super Six க்குள் நுழையும் வாய்ப்பை இந்தியா உறுதிப்படுத்திக்கொண்டது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.60 | 97.02 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.86 | 153.08 |
| 1 யூரோ | 103.57 | 104.57 |
| 1 சுவிஸ் பிராங் | 70.73 | 71.82 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 58.40 | 58.96 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.83 | 25.83 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.